www.padippakam.com

# ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்



## தரும பரிபாலன சபையின்

# நூற்றாண்டு விழா மலர்

## 2004

படிப்பகம்

www.padippakam.com

# மலர் உள்ளடக்கம்


| | |
|---|---|
| பரிபாலனசபை கீதம் | 1 |
| ஆத்தியடி நாயகன் பதிகம் | 3 |
| ஊஞ்சல் | 11 |
| சுப்ரமணியர் மேற்பதிகம் | 15 |
| கொடியேற்ற பதிகம் | 18 |
| முருகன் தாலாட்டு | 20 |
| ஞான ஊஞ்சல | 21 |
| ஆத்தியடி பிள்ளையார் கோவில் வரலாறு | 23 |
| சமுகத்தில் சமயம் | 31 |
| தரும பரிபாலன சபையின் பாதையில் | 36 |
| விநாயகர் பெருமை | 42 |
| அன்பும் அறமும் | 44 |

| | |
|---|---|
| ஆத்தியடி சன சமுக நிலையம் | vii |
| சைவ மன்ற பாலர் பாடசாலை | ix |
| வருடாந்த நிகழ்ச்சி நிரல் | xiv |
| நன்றி கூறுகின்றோம் | xix |


படிப்பகம்

www.padippakam.com



உ

# ஆத்தியடி விநாயகர் ஆலய பரிபாலன சபைக் கீதம்

பூசகர் பூசனை புரிந்திடவும்
புனிதநல் லாலய உற்சவங்கள்
காசினி மீதினி தேநிகழ
கடமை கண்ணியத் தோடினிதே
பேசிடு மாகம விதிப்படியே
புரிந்திடப் பரிபாலன சபையாய்
தேசமிதற்குயர் தொண்டியற்ற
தோன்றிய விநாயக ராத்தியடி

அதிசய விநாயக ராலயத்தின்
அசைவுள அசையா ஆதனத்தை
பதிவுசெய் துயர்வாய்ப் பேணுவதும்
பக்தியை வளர்க்க சைவநெறி
அதுதழைத் தோங்கிட ஆர்வமுடன்
அரும்பணி யாற்றிடுஞ் சபையிதுவே
இதமுட னப்பணி யதுதொடர
இறையருள் புரிவான் விநாயகனே!

நிதியிதை நிகழ்த்த வேண்டுமென
நிரந்தர நிதிசேர்த் ததனுடனே
புதியநல் முயற்சி யாய்நிதியை
பெற்றதை நிருவா கத்திறனாய்
எதுஎது வேண்டு மெனவறிந்து
ஏற்றவை செய்தே இயக்கிவரும்
அதிசய விநாயக ராலயமாம்
ஆத்தி யடிப்பரி பாலனமே.

சேவை யதற்கிவை மட்டுமன்று
செய்பணி சமூகப் பணியுடனே
ஆவலி னாலுயர் கல்வியதை
அடைந்திட மாணவர்க் கானபணி
தேவையறிந் ததையினி தேநிகழ்த்தும்
தீந்தமி ழாளர்க ளிங்கிதமாய்
நாவலர் போலுயர் வாலயமது
நற்சம யம்வளர்ப் பார்நிதமே.



படிப்பகம்

www.padippakam.com



ஆலய மிதற்கே யானமடம்
அழகுற விளங்க அதற்கினிதே
வேலைகள் செய்வித் ததைப்பேணல்
விநாயக ராலய நிர்வாக
வேலைகளிலொன் றதையிதமாய்
விரும்பினர் செய்யத் துணிவுதுணை
காலநிலை யாற் றொழிற்றடங்கல்
காணிலு மூக்கங் குறைத்திலரே.

வேறு

நற்பணி தொடர வேண்டும்
நம்மதம் தழைக்க வேண்டும்
இப்பெரு மாலயத்தின்
இறையருள் நிலைக்க வேண்டும்
அப்பரை சுந்தரர்போல்
ஆளுடைப்பிள்ளையைப்போல்
இப்பெருஞ் சைவநாடு
உயரநா முழைப்போம் நன்றே.

-தொண்டர்.



படிப்பகம்

www.padippakam.com



உ

கணபதி துணை

# ஆத்தியடி நாயகன் பதிகம்

## காப்பு

*சிந்தித் தவர்க்கருளுஞ் சிற்பரா னந்தமய*
*வெந்தையே தந்திமுகா விப்பதிகஞ் - சந்தச்*
*சுவையும் பொருட்சுவையுமஞ் சொற்சுவையும் பெற்றே*
*யவையடைய யீவா யருள்.*

## அடைக்கலம்

இந்தமாவுலகினண்ணு தற்கரியவெழில்பெறுமானுடப்பிறவி
யீந்தனைமுன்செய்தவத்தினாலடியேனியற்றிலடியேனியற்றிலனொருதவமின்னே
சிந்தையிலுள்ளேனுன் றிருநாமஞ்சிவனடியார்குழுநாடேன்
சேருவேனின்னை நினைகிலாதவரைத்தீனருக்கொன்றையுமுதவேன்
கொந்தவிழ்மூலையார்மயக்கினலலைவேன்கோபமோடேவ்வியமகலேன்
கோள்களையுடையேன்குருவருளிலையேற்கொடியனேன்பவக்கடல்கடந்து
அந்தமிலின்பநின்னடிக்கமலமனையுமாறெது கொலோவறியேன்
ஆந்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே (1)

தேசுயர்சூரபதுமனாமவுணன்சினந்துறந்துனிசகிக்காது
தினமரன்பூசைபுரியநற்பூங்காவைத்தனன்விண்ணவர்கோமான்
நாசமத்துவுமடைந்ததுசூழ்வால்நரமத்தின்றியேயந்த
நாளினிலவனுநாரதன்பணியால்நண்ணினானுன்னைநீயதற்குத்
தேசிகன்ஞானக்குறுமுனியெதிரேசென்றுநற்கொடியுருவெடுத்துச்
சிந்து காவேரிகாரக நீர்சிந்திவரித்தநின்கருணையதெங்கோ
ஆசையைக்கலையநிதம்நினதடியிலன்பினைக்கமவினையருயோ
யாத்தித்தண்ணீழற்கோயில் கொண்டருயும்விநாயகாவடைக்கலமுனக்கே.(2)

அரியயன்முனிவர்புரந்தரன்முதலாமமரருந்தேடொணாமுதலே
யாரணப்பொருளேயாமலர்கடவுளம்பிகையளித்தசற்குருவே
சரவணபவற்குவக்குமுன்னவாதத்திமுகத்தனேதனிமயிலில்வர்ந்து
தகுவரையழித்துவானுலளித் ததற்பராகணபதிசயனே
வரதனேமன்னர்தரியலர்தேவர்வசிகரம்மாடெழிற்கல்வி
வளர்சிவஞானமுனதிருநாமமனதினிலனுதினமுன்னு
மரியநற்பேறிதநிதினியாழ்வாயலக்கணிற்பட்டுழல்வேனை
யாத்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகவடைக்கலமுனக்கே. (3)



படிப்பகம்

www.padippakam.com



கவிமகாமுனிவன்பத்தினிமுகுந்தைகட்டிளவுருக்குமாங்கதனைக்
கானிடைகண்டுமயங்கினள்மிகவுங்காமநோய்தலைக்கொளத்தணிப்பான்
அவன்பின்னேசென்றுநைந்தனளவனுமிணங்கிலனதற்குருத்துறைத்தா
ளனுகொணாக்குட்டநோயுடல்பிணிக்கவருங்கொடுஞ்சாபமங்கதனை
நவையறநீக்கவொருவருங்காணானண்ணினான்றஞ்சமென்றுனையே
நாயகநீயுமதுவொழித்தண்டாய்நாயினுங்கடையனேனிந்த
வவனியில்மிடியேபிணியதேவருத்தவலைவதுகண்ணுறாயேனோ
ஆத்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (4)

பொனனவிர்கொன்றைநதிமதிநாகம்புனைமுடிப்புண்ணியர்வலம்வா
புவியெனவாவரைவரமதுவந்துபுகலுமாங்கனியினைப்புழைக்கை
தன்னிலேவாங்கிச்சங்கரன்றானேசகமவையெலாமெனக்காட்டித்
தானவர்குழுவைவாட்டியேயமரர்தம்பதியளித்ததற்பரனே
என்னகங்குடிகொளீசனேயென்னையென்மனைமகார்தமைக்கிளையை
யிடர்மிடியெவ்வம்பகைவினையெவையுமீர்த்திடாதொழித்தருளெமக்கு
அன்பதையுன்றனடியினிலடியரடியினிலயர்விலாதென்று
மாத்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (5)

நானுனற்கேதுகுறையதைப்புரிந்தேனானிலத்தொருதுணையின்றி
நாயினுங்கடையாய்த்திரியவேயுன்றனாமமதொருபொழுதுன்னா
வீனரோவளகைக்குபேரனேமகாவனென்னனவேவழ்வினைப்பெறுவா
ரிறைவனீயானுன்னடிமையேனிந்தவிழிவினைப்பெறுவதுமுறையோ
தேனுகர்வண்டுமொய்குழல்வலவைத்தேவியைப்பாங்கரிலுடையோய்
சிறுகுடிறனிலேகுறவர்கோன்வளர்த்ததெய்வதக்கன்னிகையாறா
மானனமுடையவண்ணலைமணக்கவருளியமுதல்வனேவிகடா
வாத்திற்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (6)

தருசெநெல்நாழியிரண்டினால்மூன்றுபத்துடனிரண்டெனுந்தருமந்
தந்திடுதேவிமுதன்மகவாகிப்பரிந்திரந்திடுபவர்க்கினிய
வரமருடலைவனீயெனநம்பிவந்துநானடைந்தனனென்னமுன்
வாவியரியநின்றிருக்கோலவடிவிணைக்கண்ணுறவெளியேன்
தரிசனைசெய்துமலவிருளோட்டத்தனிப்பெருமஞ்செழுத்தோது
தக்கநன்னெறியைத்தாவெனைவாதபயிததியமையமுய்வாட்டா
தரிதிருமாலோன்மருகனேமுருகோனண்ணலேவரதனேசயனே
ஆத்திதண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (7)

பிள்ளைவெண்பிறையைச்சூடியபெருமான்பிராட்டியோடுயர்கிரிக்கயிலை
பெட்புறுமருங்குபோயினரங்குபிரணவம்பிணைத்தலைப்புரியக்
கள்ளுறுதாமக்குழலுமையிதென்னகாரணமெனவினவுறுதலுங்
கருதுநம்பிள்ளைவருகநீயென்றுகண்ணுதலழைத்திடவந்து



படிப்பகம்

www.padippakam.com



வெள்ளைமாவூருமரசனுக்காகவெங்காயமுகவனோடமரை
விளைத்ததுமுனொற்றைக்கொலம்பினாலுயிரைவிட்டியபகவனேயடியே
னள்ளிலைவேற்கணரிவையர்மயக்கிலைவுறாதிருக்குநாளுளதோ
ஆத்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகவடைக்கலமுனக்கே. (8)

ஏகதந்தாலம்போதராசுமுகாவெளிற்கசகர்ணிகாவிகடா
இருவினைதவிர்க்குங்கசான்னாகபிலாவினியவெண்பாலச்சநிதிரனே
நாகலையளித்தகணாதியட்சாயாநவையிலாத்தூதணகேதுவேயெம்
நடலையழிகும்விக்கினராசாநற்கதியருள்கணாதிபதீ
வாகினையுடையசூர்ப்பனாசீரவக்கிரதுண்டவேரம்பா
வரமருள்கந்தபூர்வசாவென்றேமன்பெயரிலாநினையெளியே
னாகுவாகனசிந்தாமணிசயனேயர்ச்சிக்கவனுதினமருளதாய்
ஆத்தித்தண்ணீழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (9)

## அற்புதானந்தம்

சனகாதிநால்வருக்கன்றுகல்வானிழற்றனிஞான்நிலைகாட்டிநீ
தலையாகுமவர்பாசவினைநீக்கிநின்மலர்த்தாளினைப்புனையவைத்தாய்
எனையாளநீகருதில்லவோவெளியெனுமந்நிலைபேறுபெறுவே
னிதமாயுலகத்திலடியேனுமிழிவானவியல்பினைப்பெறுதல்வசமோ
தினையானபோதளவுமுன்றனைக்கருதாதுதீமையேயுளஉலுத்தார்
திருவோடுபவழ்சோடுவாழ்வுறத்திறமேதுதோர்கிலேனானுமந்தோ
அனைமாதுபங்கனருடந்திமுகவெந்தையேயமரரிடர்போக்குமுதல்லவா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (10)

எந்தவுயிருக்குமுன்னாருள்கிடைக்குமொன்றின்சுருதிகலையாகம
மியம்புமொழிபொய்யதோவல்லவெனிவல்வுயிரிலெளியேனுமொருவனலனோ
வந்தவினைவிக்கினம்பனிபோலமாற்றியருள்வல்லவொருதேவனலவோ
வறுமைபிணியிகலாதியெனைநலிதிடவுனதுவன்கருத்தீதுகொலலோ
சிந்தையருநோக்கிலாதிறுமாந்திருந்திடத்தீயனேன்செய்தபாவமோ
தினந்தினம்நானுமிங்கலறவுங்கேட்கிலாய்சிறியனேனேதுசெய்வேன்
அந்தமதிழைக்கவங்குசபாசமேந்துகையண்ணலேயைங்கரத்தோய்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (11)

எனையாளவந்தவொருகுலவெய்வமுனையன்றியில்லைவேறொருவர்கண்டா
யினியவிதவாழ்வினையிகத்திநின்மருவிடவுமெளியனுன்பாதம்புயந்
தனைவந்துசேவையதுபுரிந்துபேரின்பாசகரத்திடைமூழ்கவுந்
தக்கவருளின்றுவருமின்றுவருமென்றுளந்தாங்கிப்பொறுக்கவேமன்
தினமதோவாறதுன்னலுளலைக்காணிலேன்சின்மயானந்தவுருவே
சென்றுகார்ப்பிள்ளையின்வடிவினையெடுத்துநற்சீர்பொதியமுனிவனெதிரே
அனமாடுபுண்ணியக்காவேரிகரகநீரவனிமிசைவந்தமுதல்வா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே



படிப்பகம்

www.padippakam.com



குணமேதுஞ் சற்றுமில்லாத தீப்பாவியைக் கோதிலாஞானமிலரைக்
கோபமுடனவ்வியங்கொடுமைமிக்குள்ளரைக்கோள்களைச்சொல்லுநீர்மை
கணமேனுமொழியாதகசடரைச்சண்டரைக்கண்ணியம்புரிவதல்லாற்
காத்திரத்தோடுவந்தேற்றிடுந்தீனரைக்கண்ணினாநோக்கிலேனுங்
பணிபூண்டுமணிபூண்டுவிநயஞ்செய்நீறுபுனைபழவடியர்கூட்டமணுகேன்
பக்குவம்வந்துநான்பரகதியடைந்திடும்பருவமொன்றுண்டுகொல்லோ
அணிபாணிப்பள்ளியைக்கொள்ளுமான்மருகனேயம்பிகைக்கினியமைந்தா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (13)

சந்ததமுனக்குநான்வந்தனைபுரிந்துநின்றனியெழுத்ததனையோதச்
சாதுசனசங்கமஞ்சார்ந்திடக்கல்விகலைசதமகன்செல்வபோகஞ்
சிந்தைகளிகூர்ந்துநனிபெற்றிடத்தாவரந்தீரர்தவாதமையஞ்
சினந்துவருபித்தமொடுசூழ்பிரமகத்திநோய்சீறுவலிகுன்மகாசம்
எத்தனைத்தொடர்பொலாக்கோள்களின்றோடமேயெமவாதையாமவையெலா
மெனைவந்துநலியாமலியினியவருணல்குவாயிமாசலத்தலைவிமதலாய்
அந்தரத்துணையன்றியாரெனக்குண்டுகொல்லாத்திரத்துதவுமுதல்வா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (14)

நாராயணற்குவெஞ்சாபந்தொலைத்திட்டநாதனீகொம்பொடித்து
நகுமேவரையிலேபாரதசரித்திரம்நன்குவரைதேவனும்நீ
காராருகண்டன்றிருக்கைமாங்கனியினைக்கைக்கொண்டகடவுளும்நீ
கருதடியார்வினைதீர்த்தவர்க்குதவுவள்ளனகலைமதிக்குற்றசாபம்
வராதுநீக்கியருளைங்கரக்களிறுநீமகபதிவடுக்கண்மாற்றி
வல்லபையைவாமத்தில்வைத்தருளுமுதல்வனீமன்பொதியமுனிவனுக்கும்
ஆராதஞானகலையூட்டுதேசிகனுநீயருளுநீயடியனுக்கும்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (15)

சிந்துரமுகத்தனேமூஷிகமிவர்ந்விடுஞ்சிற்பரானந்தற்பராபுன்
சிந்தைக்கடங்காதசெல்வமேமுத்திதருசித்தனேயேகநாதா
பந்தவினைபாற்றிடும்பாசாங்குசத்தனேபனிவரைப்ராட்டியாதம்
பசியமுலையமுதுண்டவிக்கினவிநாயகாபராபரச்சோதிவடிவே
வந்தனைபுரிந்திடும்மன்னுயிர்க்கருளதும்மற்றதுசெயாவுயிர்க்கு
வன்மறக்கருணையுஞ்செய்திடும்பகவனேவானவர்க்குலகளித்த
அந்தமில்சேய்க்குமுன்வந்தமாகுன்றமேயடியனேற்குற்றகுருவே
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (16)

ஏழைக்கிரங்கிடச்சித்தநிற்கில்லையோவெளியனேன்பட்டபாட்டை
யிலவினிற்பஞ்சுநான்பட்டதோசொல்லவோவெண்ணவோமுடிவுபெறுமோ
பேழையுத்தரனேபிள்ளைமதிசூடியருள்பிஞ்ஞகனமர்ந்தபொருளே



படிப்பகம்

www.padippakam.com



பெட்புடையபிள்ளைநானன்னைநீயென்றுபேருவகையொடிருந்தெனந்தோ
தாழ்வினைப்பிள்ளையதடைந்திடத்தாங்கியேதாயவளிருப்பதுண்டோ
தாய்மனம்பித்துநற்சேய்மனங்கல்லெனச்சாற்றுமொழிபொய்மொழியதோ
ஆழ்வினைக்கென்னைவெவ்விரையதாய்விடுகிலுன்னாரருட்கேற்றமென்னோ
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (17)

பிள்ளைதான்செய்திடும்பிழையைப்பொறுப்பதுபிதாவுக்கிழுக்கதாமோ
பெருமனேபொல்லேற்கிரங்கிடிற்பேருலகுபசுமென்றச்சமோதான்
வெள்ளைவாரணமேவுவேந்தனுக்காகவேவேதியன்காசிபற்கு
வேழமானனப்பிள்ளையாய்வந்தன்றுவெவ்வசுரரிருவர்தம்மை
உள்ளவர்கொதித்திடக்கோறல்புரிதேவனேயுத்தமர்க்குற்றகுருவே
யுவமிக்கொணாதவோங்காரபிரணவருபவுயர்வுறுமறைக்குமுதலே
அள்ளிநற்காவிரியகத்தியற்கருளினோயடியனிடர்தீர்தருளுவாய்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (18)

தஞ்சமெனவந்தவர்க்கபயமேதந்திடுதயாநிதிக்கடவுளேபுன்
றமியனேன்படர்தாக்கொழுகொம்பிலாவொதனிக்கொடிக்கிணையாகிய
நெஞ்சுபுண்ணாகநின்றிங்குநானேங்கவும்நீயதைத்தேர்கிலாயோ
நின்மலாசுத்தநற்சோதியாயோங்கியேநீண்டமாலன்னமூர்ந்தோன்
வஞ்சகமனத்தினாற்பிரமமெனவெழுகாலைவன்செருக்கதையழித்த
வள்ளறன்மைந்தனேயைங்கரத்தேவனேவாமனப்படிவமுடையோய்
அஞ்சமர்புரிந்ததத்திமுகவனைச்செற்றாகுவாகனத்தமர்தேவனே.
ஆத்திநிழல்கோயிலகொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (19)

## விநாயகக்கடவுளது பன்னீரவதாரப் பதிகம்

### (1) வக்கிரதுண்டவிநாயகர்

ஆன்மகோடிகளெல்லாமுன்னகத்தொடுங்கினாராறுதற்கோர்பிரளயத்
ததுசெலத்தனுகரணபுவனபோகத்தையவ்வவர்வினையனுக்கீடதா
யளித்தவர்க்கதர்கன்மவொப்பினின்சேவடியருளிடவுன்னிநீயுந்
தான்பெயருருவுமுன்நடுவீறுமில்லாத்தனிப்பரபஞ்சசோதிவடிவே
சகவக்ரதுண்டநன்மூர்த்தியாய்மண்பொதுத்தந்தைமுன்முத்தேவருஞ்
சராசரம்படைத்தளித்தொடுக்குமுத்தொழிற்குமேதந்தவர்பிரமைகொள்ள
மேன்மைபெறுமேதினிப்பேதமவையாவையும்விளக்கிநின்னகட்டினுள்ளே
வேதனின்புதல்விமார்மருங்கினிலமரவேவேண்டினர்க்கருள்மேலோலார்
வேந்தனின்வடுக்களையுருக்குமாங்கதனுற்றவெங்குட்டநோய்தனையும்
மான்றவழ்மதியினின்சாபமுந்தீர்த்திட்டவள்ளலேசானனத்தோய்
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடிழந்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே.



படிப்பகம்

www.padippakam.com



### (2) சிந்தாமணி விநாயகர்

அந்தணர்கபிலருக்காகநற்சித்தியோடற்புதப்புத்திபாசத்
தமரவோர்தந்தமுங்கரிமுகமுமீரிரண்டத்தமுந்துதிக்கரமுமுன்
றக்கமீர்கழல்களும்மோதகம்மழுமாலையரவிந்தமேந்துவடிவிற்
சந்தமுறுசிந்தாமணிவிநாயகனெனச்சாற்றுபேரவதாரமாய்ச்
சனித்தரியிவரந்தம்முனியினுக்கிடரினைத்தயையிலாதிழைத்தநனிசீர்த்
தவத்தினின்வலியனாங்கணனைநீதடித்தவன்றருக்கினாற்கவர்ந்தவுயிரின்
பந்தமதொழிக்குசிந்தாமணியினையுமப்பரமனடியாற்குநல்கிப்
பங்கயன்மாலுமோகாணொணாச்சோதியாம்பகவற்குகந்தகுமரா
பத்தியோட்னுதினம்பரவுவார்தமக்குநேர்பல்லிடரைநீக்கிமேலாம்
வந்தைசேர்பரகதிவழங்கிடுங்கருணையின்வள்ளலேசித்தியோங்க
மன்னுதிருவாத்தியடிவிக்னவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே. (21)

### (3) கசானனவிநாயகர்

செய்கமலவாசியின்கொட்டாவிதனில்வந்தசிந்தூரனாமவுணனுஞ்
சீர்சகப்பொருளெலாம்பொடிபடுத்தரவணைச்செல்வனுந்திசைமுகனுமே
திடுக்கிடவொடுக்கிவன்செருக்கினாற்கயிலையிற்றிரிபுராந்தசனனோடு
வங்கையுடனமராடுவேளையோர்வேதியன்மகனாகவிருவாநடுவே
வந்துநின்பரசுதனைநாட்டியவ்வவுணனின்மதமொழித்தெந்தையன்பார்
மலைமாதுவயிறினிற்கருவதாய்வளரவுன்மாசிரசைவல்லவவுணன்
சங்கரன்மதலைநீசிரசிலாமுண்டமாய்ச்சனித்துநின்னாடல்காட்டத்
தனிப்பெருங்கசமுகாசுரன்றலைபொருத்தியேதாங்கியேகசானனப்பேர்
தரியலாக்கிடியேறுபோலாளியூர்ந்துவெந்தகுவனாஞ்சிந்தூரசூர்
மங்கிடக்குழைத்துமத்தகத்தினிற்பூசியேமன்பதைமகிழவேதான்
மன்னுதிரவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைத்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருள்வாயே. (22)

### (4) விக்கினவிநாயகர்

போகியின்னேவலாலெமருபவிக்கினன்பகழேமதியரசையும்
பரிந்தசீர்மகந்தையுமழித்துவெஃசெருக்கினாற்புங்கவர்தவத்தரானோர்
போற்றிடும்யாகங்கள்யவயும்போக்கிடப்புரந்தரன்றவத்தரன்னோன்
சாகசந்தாங்கிடாதுன்னைவேண்டிடவுநீதந்திமுகநான்குகரமுந்
தனித்துதிக்கையுடன்பராசுவமுனியகந்தங்கிசூர்க்கரவுஞ்சனின்
சாபத்தைநீக்கிடுங்கருணையாலன்னவன்றாங்கிட்டகோலமாகும்
ஆகுவினையூர்ந்துவெமருபியையொடுக்கிநும்மத்தமொளிரங்குசத்தா
லவனியிடரோட்டிவிக்கினராசரென்னவோரபிதானமேற்றுமேதா
னான்மபோகங்களைப்பசுக்களுக்கூட்டியேயவர்பக்வமானபோதே
வாகுகெடவாணவமலத்தினைப்போக்கியாள்வல்லபைக்குகந்தகுருவே
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாகாவல்வல்வினையினீடழித்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே.



படிப்பகம்

www.padippakam.com



### (5) மயூரேசவிநாயகர்

ஆனைமாவானனத்துடனுதித்துயிரெலாமளித்திடும்பரமுகுருநீ
யற்புதக்கலாபமூர்ந்தருண்மயூரேசனென்றவனிநனிபோற்றவேதா
னவதரித்தயனாதிதேவருக்கெண்ணிலாவலக்கணைச்செய்தசூட்சித்
தானயைந்தலைவனாங்கமலாசுரனெனுந்தானவக்குரிசிறன்னைச்
சங்கரித்தின்னுமோர்கற்பத்திலவ்வுருத்தாங்கியுமையம்மையார்க்கே
தகயனாயத்தோன்றிவென்சிந்துராசன்பெருந்தந்திரத்தலைமைவாய்ந்த
தானவலுக்குழுவெலாஞ்செகுத்துமவ்வவுகைச்சமரினிற்றடித்துமோலோர்
தங்குதீன்சிறையினின்றெடுத்துமேயவுனனின்றந்தைக்குமரசளித்தே
சண்முகப்பொருமானுக்குன்றனித்தோகையைத்தந்தகப்பிரமைகொண்ட
மான்மகன்மாலுமேதேடொணாச்சோதியாய்வந்தபிறைசூடிமதலாய்
மன்னுத்திருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்ததேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே. (24)

### (6) பாலச்சந்திரவிநாயகர்

தேவமாதரசிநற்றிலோத்தமைவனப்பினிற்றிசைப்புண்டுதேனுவூர்தி
சித்திட்டவீரியத்துதித்ததீயவுணானாஞ்சீறுமனலாசுரனுமே
செருக்கினாலுயிரொலாம்பொடிபடுத்திடவுமேசெற்றிடல்லனையுந்தா
னாவதோர்வகையினைக்காண்கிலாதுன்னையோவர்க்குற்றதஞ்சமென்றே
யணைந்திட்டப்பிஞ்ஞகன்மதலையேயன்றுமோரந்தணச்சிறுவனுருவா
யவணடைந்தசுரனைவிழுங்கியவ்வனலுமேயடர்ந்துனைப்பரினாற்போற்
பாவகையாகநீபண்ணிடப்பரந்ததேபாருலகனைத்துமந்தோ
பங்கயன்முதலவாந்தேவரும்படிவருமபச்சையறுகர்சசனையினாற்
பரவவதுநீங்கிடும்படிசெய்தவாடலாற்பாலச்சந்திரனென்னுமோர்
மாவரும்பேரினைத்தாங்கிடுந்தாராமாயவற்கினியருமருகா
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழித்து
வந்மடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே.

### (7) தூமகேதுவிநாயகர்

உன்னருள்வசத்தினாலுலகளந்தோனுநல்லுயர்தவச்செல்விசுமுதைக்
குத்தமக்குழவியாயவள்வயின்வளரவேயோங்குபேர்த்தூமகோனன்
றுருவிலாவாகாசவாக்கினிற்றிடுக்கிட்டூறுசெய்திடச்சிசுக்கே
யுன்னிவென்வீரரைவிடுத்திடத்தானுமோவும்பருங்காணவொண்ணா
வுமையவட்கமர்ந்தசீர்மதலைநீசுமுதைபாலோங்கியோர்பலனாக
வூட்டியேயவள்முலைப்பாலவனடைக்கிடருறுத்தவங்கணைந்தவீரர்
தன்னையுந்தூமரசனையுநின்வாயொழுந்தனிப்பெரும்புகையினாலே
தடிந்துமனனோனரசவள்வயின்சலசலோசனற்களித்தவளைவடன்
றவனையுங்காத்தூயர்த்தூமகேதென்றபேர்சாற்றியேகருணைநிதியாம்
வன்னமயிலூர்தும்பர்காத்தவற்கண்ணனேமலைமுனிக்குகந்தகுலுவே
மன்னுதிருவாத்தியடிவிக்கினவினாயகாவல்வினையீனிடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே.



படிப்பகம்

www.padippakam.com



(8) கணேசர் (9) கணபதி

ஏகவெயிறத்தேனேபலியினுக்குக்கழிவிலாவெழிலாயுடிரிபுரமுநீ
யீயவுமிமையவர்க்கொண்ணிலாவிடரினையிழைத்தனனதற்கவருமோ
யேறிவர்தருட்டிரிபுரந்தகன்சரணகத்திருத்திவந்தரற்றிடத்தஞ்
சோகமதையெந்தையுமகற்றுதற்குன்னினான்சோதிமயமானவரின்
சுந்தரமுகத்தினிற்கணேசரவதாரமாய்ந்தோன்றிவெம்பலியையவாட்டாத்
தோற்றமதளித்துசிவநேசருக்கெளியானேகடவுளர்கிடுக்கணீக்க
வாகுபெறிமாசலத்தலைவியோடுமாபதிமகிழ்வுறப்பிரணவத்தின்
வந்தமாகணபதிபபேர்கொளவதாரமாய்வரரிக்கசமுகனைநின்
மாதனிக்கொம்பினால்வாட்டியன்னோனெழும்வன்பெருச்சாளியான
வாகனமிவர்ந்தரியராவுருப்போக்கியேமதகயமுகத்தினோடு
மன்னுதிருவாத்தியடிவிக்னவிநாயகவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே. (27)

(10) மதோற்கடவிநாயகர்

மங்கையோர்பங்கனின்வரமிகப்பெற்றவெம்மாயையின்வலியரான
மாவிறற்றேவாந்தகனராந்தகன்செயும்வன்கொடுமைகோறலுக்கே
வானவருமன்பதையுமுன்னையேசரணதாய்வந்தடைந்திடவுமேவெண்
டிங்கள்செஞ்சடையணித்தேவுதன்மதலைநீதிசைமுகனுமாதவனுமே
தேடொணாமதோற்கடரென்னுமவதாரமாய்ச்செனித்துமேகாசிபதற்குந்
தெரிவையதிதிக்குநன்மதலையயன்றுமேசித்திரன்சாபநீக்கித்
தங்குசீர்க்காசியிற்சிறுவரோடாடியேதகவுடன்சித்திபுத்தி
தமைமணந்துறுவலைப்புரிந்தவப்பாதகத்தகுவரோடவர்குழுவையுந்
தடிந்துமந்தலத்தினிற்றராபதிமகற்குமேதகுடரோகிதானாகவே
மங்கலவளந்தருபிரணவச்சொருபியாம்வரத னேயேகநாதா
மன்னுதிருவாத்தியடிவிக்னவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே. (28)

(11) டுண்டிவிநாயகர் (12) வல்லபைகணேசர்

பிரசுவன்வரச்செருக்கரியத்திடவவன்பிள்ளையாதந்துராசதனுமே
பெருந்தவமியற்றியேபிஞ்ஞகனிடம்வரப்பேற்றினாற்றாதைசெற்ற
பிரமனன்பிதாமுதற்றேவரைவருத்தவேபேரருளுருபமான
வரைமகள்முகத்துடுண்டிராசவரவதாரமாய்வந்தவுணனுயிரைநீயும்
வாங்கியோர்கணிதனாய்க்காசிசோத்திவோதனன்மருளறுத்தருந்தவர்க்கே
வரன்காசியுறவாக்கியையங்கரத்தேவவுன்வாமத்திலுற்றவம்மை
சராசரப்பொருடனாலலாதியங்காதெனத்தருக்கித்துநின்றவதனாற்
சார்ந்திட்டவினையினைப்போக்கவல்லபையெனத்தவன்மரீசிக்குமகளாய்த்
தங்கவேயவணணைந்தவளைநீமணத்தலாற்றந்திமுகமானவுருவே
வரதனேவல்லபைகணேசனென்பேரினால்மன்பதைகள்போற்றவேதான்
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனாச்சரணாகநானுமேவரமெனக்கருளுவாயே. (29)

திரு.கோ.கணபதிப்பிள்ளை அவர்களால்

*1913-ம்ஆண்டில் கோவில்*

*முதல்மகா கும்பாபிசேகத்தின்போது பாடப்பெற்றது.*



படிப்பகம்

www.padippakam.com





# ஊஞ்சல்

காப்பு

மாமேவுசெல்லநிறைபுலோலிமேற்கார்வளம்பதிவாய்க்காற்புளியடிஇயென்றோதும்
பூமேவுசித்தியுறுமிலையற்புதங்களும்ஜொலித்திலகுமாத்தியடித்தளியின்மேவுந்
தூமேவுமேகவெண்கோட்டைங்கரத்தும்பிமுகத்சித்திவிநாயகரின்மீது
பாமேவுமூஞ்சலிசைசாடவன்னோன்பாதமலரிணைபரவிப்பணிகுவோமே.

சீரார்ந்தநாதவிந்துதூண்களாகத்திருவார்ந்தசத்தியொளிர்விட்டமாகப்
பேரார்ந் தசிவாகமங்களிழையதாப்பீடார்ந்தசதுர்மறையுங்கயிறதாக
ஏரார்த்தமறையுளர்த்தம்பலகையாகஎழிலார்ந்தவேங்காரபிடமேவித்
தேரார்ந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞசல் (1)

தோடாருமலராத்திமாவைசூட்டுஞ்சோதிபெறுதிருமுடியின்மகுடமின்னக்
கோடார்தகிம்புரிப்பூணினிதுமினக்குணமார்ந்தந்ததிருநுதலிற்பட்டமின்னப்
பீடார்ந்தமணிவலயம்புயத்தின்மின்னப்பெருமைசெறிந்திருமார்பின்மதாணிமின்னச்
சேடார்ந்தவாத்திடிக்கோயின்மேவுஞ்சிசித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல் (2)

ஆய்ந்திடுபவன்முனிவர்மறையோதியாடவந்தராமராமர்துதிகூறியடா
வாய்ந்திடுபண்காந்தருவர்பாடியாடவானரம்பைமுதன்மகளிர்கூடியாடப்
பாய்ந்திடுநீரருவிழிப்பத்தராட்டப்பன்னுகுறட்டைபடைவீரர்பாங்கிலாடச்
சேர்ந்திடுபூவாத்தியடிகோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல் (3)

அணிவளர்வெண்மதிமுடியீராடீருஞ்சல்அம்பரத்தோர்துதியடியீராடீருஞ்சல்
பணிவளர்பொற்கச்சாரேயாடீருஞ்சல்பரவுமுயிர்க்கச்சாரேயாடீருஞ்சல்
மணிவளர்செஞ்சடையாரேயாடீருஞ்சல்மாலினர்நெஞ்சடையாரேயாடீருஞ்சல்
திணிவளர்பூபதியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல். (4)

ஏர்பூத்தபொன்னுலகத்தமரர்தங்களேற்றமளித்தங்கைவரையேவல்கொண்ட
பேர்பூத்தகயமுகத்துக்கயவனோடுபெரும்போர்செய்தொருதனதுமருப்பொடித்துத்
கார்பூர்த்தவாகமதிலெறிந்துவீட்டித்தானவன்மூடிமாவூர்தியாக்கிச்
சீர்பூத்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல். (5)

கொம்பைசெறிமுலையுமையாண்மகிழ்ந்துபெற்றகும்பிமுகப்புத்திரரேயாடீருஞ்சல்
வெம்மைசெறியிராணன்கொளிலிங்கங்கொள்ளவேதியனாங்குத்திரரேயாடீருஞ்சல்
அம்மைசெிமலரடியையன்பிற்போற்றுமடியாருக்குமித்திரரேயாடீருஞ்சல்
செம்மைமராத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல்.



படிப்பகம்

www.padippakam.com



வாரணிந்தமலையானையமுலையினாளாம்வல்லபையையிருத்தியருள்வாமத்தாரே
ஏரணிந்தவாடகப்பொனாத்திபூத்தவினையின்மலர்கொடுத்திருந்தாமத்தாரோ
நேரணித்தவன்பினர்கணிதமுமேத்தநிலைபேறாதியவருளுமேமத்தாரே
சீரணித்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயக்கடவுளாடீருளு:சல். (7)

நித்தியரேநின்மலரேயாடீருஞ்சல்நெற்றியிலோர்விழியாரேயாடீருஞ்சல்
சத்தியரேதற்பரரேயாடீருஞ்சல்தாரகமாமெழுத்தாரேயாடீருஞ்சல்
முத்தியரேமுன்னவரேயாடீருஞ்சல்மோதகாமர்கரத்தாரேயாடீருஞ்சல்
சித்தியபூவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல். (8)

போதாந்தப்புண்ணியர்கள்போற்றவன்னோர்பூவுளத்தில்லுறைசோதிபோதமார்ந்த
வேதாந்தமெனவுரைசெய்வீட்டிலாரும்விளங்குசுடரேமேற்றத்துவமதான
நாதாந்தங்கடந்தொளிருஞ்ஞானரூபநாயகரேயங்குசபாசத்தினாரே
சீதாந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல். (9)

பூமாதுவாழமுகில்பொழிந்துவாழப்புகல்வேதவாகமங்கள்பொலிந்துவாழ
நாமாதுவாழவானடியார்வாழநாற்குலருமற்றையருநயந்ருவாழக்
கோமாதுவாழமெய்ச்செங்கோலும்வாழாக்குணமேவுமறநெறிகுன்றாதுவாழச்
சீமாதுவாழாத்திக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீருஞ்சல். (10)

## எச்சரீக்கை

*இராகம் - சாவேரி* *தாளம் - ஆதி*

சீர்பூத்திடுமாத்தியடித்திருக்கோயில்கொண்டளுங்
கார்பூத்திடுகரிமுகத்துக்கருத்தாவெச்சரீக்கை
நீர்பூத்திடுநதியார்சடைநீறணிந்தோன்மகனே
ஏர்பூத்திடுமேகதந்தவிறைவாவெச்சரீக்கை.

திருமேவியவாத்தியடித்தேவேகணபதியே
உருமேவியலம்போதரவோருவாவெச்சரீக்கை
குருமேவியகோட்டாறகுருகுலவேந்தர்கள்சரிதம்
பெருமேருவிற்பொறித்தேயலுள்பிரானேயெச்சரீக்கை.

பாசம்பெறுங்கரத்தாயன்பர்பசந்தெறுங்கருந்தாய்
வாசம்பெறும்தாமம்புனைவரதாவெச்சரீக்கை
நீசம்பெறநிலவிற்கொருநெடுஞ்சாபமிட்டவனே
தேசம்பெறுசெவ்வேணிகொடேவேயெச்சரீக்கை.



படிப்பகம்

www.padippakam.com



அணிசேரைந்துகரனேமுழுதகிலந்தொழுபரனே
பணிசேர்திருவணிபூண்டிடுபகவாயெச்சரீக்கை
மணிசேர்திருப்புதுக்கோயிலின்வாசாவன்பர்நேசா
துணைசேரடிதொழுவார்க்கருள்தூயாவெச்சரீக்கை.

## பராக்கு

*இராகம் - புன்னாகவராளி,* *தாளம் - சம்பை*

ஏரார்விநாயகனாம்இறைவாபராக்கு
எழிலாருமாத்தியடியுறைவாய்பராக்கு
பேராருமானைமுகப்பெம்மான்பராக்கு
பேசரியவைந்துகரப்பிள்ளையாய்பராக்கு
அத்தமத்தின்மோதங்கொளத்தாபராக்கு
அரியினிடர்தீர்தருளுங்கர்த்தாபராக்கு
பத்தருளந்தன்னிலுறைபரனேபராக்கு
பார்பதியாள்பெற்றெடுத்தபாலாபராக்கு
அங்குசந்தரித்தருள்கையரனேபராக்கு
ஆத்தியடிக்கோயில்கொளும்பரனேபராக்கு
சங்கரற்குமுன்மகனாந்தலைவாபராக்கு
சகத்தவர்கள்சேவைசெயுஞ்சாமீபராக்கு.

## மங்களம்

*இராகம் - அசாவேரி,* *தாளம் - ஆதி*

ஆத்தியடிவிநாயகற்குமங்களந் திரு
ஆனைமுகவீசனுக்குமங்களம்
நேத்திரமூன்றுடைவர்க்குமங்களம் சுப
நித்தியானந்தருக்குமங்களம்
சீராரேரம்பானுக்குமங்களம் நல
சித்திதருகணபதிக்குமங்களம்
கூராரோர்கோட்டனுக்குமங்களம் அருள்
குன்றாதநாதனுக்குமங்களம்
நாதமுங்கடந்தவற்குமங்களம்
ஞானவடிவானவற்குமங்களம்
பூதகணநாததனுக்குமங்களம் திகழ்
பூவாத்திதேவனுக்குமங்களம்



படிப்பகம்

www.padippakam.com



## லாலி

*இராகம் - நவறோஸ் தாளம் - சம்பை*

ஆத்தியடிவீற்றிருக்கும் ஐங்கரத்துத்தூயா
பூத்தூவியடிபணியப்பூசையருணேயா லாலி
எங்மெங்கும்யான்நினைக்கவெதிர்வருஞ்சர்வேசா
பொங்குவெள்ளநீர்வாய்க்காற்புளியடியின்வாசா லாலி
தந்திமுகத்தீயவனைச்சாடுமொன்றைக்கொம்பா
நொந்தவடயார்வினையைநூறியருணம்பா லாலி
அந்தகன்பாலென்னைவிடாதருளுதலர்ப்பாதா
அந்தமுதலின்றிவளரானைமுகநாதா. லாலி

## நலங்கு

*இராகம் - நவறோஸ் தாளம் - ஆதி*

போற்றினரைக்காப்பவனேபுங்கவர்சூளாமணியே
வீற்றிருக்கும்ஆத்தியடிவிநாயகனாம்பெம்மானே
தும்பிமுகவையாவேதுய்யசுடர்மெய்யாவே
எம்பிழைகள்தீர்த்தருள்கவேரம்பமூர்த்தி.

## ஏசல்

*இராகம் - நவறோஸ் தாளம் - திசரம்*

தையலரையுங்கள்மையல்வாய்க்காதினி
தந்திமுகன்தொண்டனடிநான்
பொம்பியலன்பரையாளும்புண்யவிநாயகக்குருக்கள்
புன்மொழிக்காகாரடி
ஆத்தியடிகோயிலுறையானைமுகன்பர்
அணையவினிவாராட்டி
பார்த்துமருட்டாதேசரசம்புரியாதே
பணிந்துமென்வாயாதடி.

## முறையீடு

*இராகம் - சவுராட்டிரம், தாளம் - திசரம்*

ஐமுகரேநீர்பயந்தஆத்தியடிப்பிள்ளையார்என்னை
ஆவலைத்தங்குமிங்குமாட்டுவதைக்கண்டிலிரோநீரே
எத்தனைபேரன்பர்களுக்குக்கிகபரவாழ்வீந்துவிட்டான்
என்னைநீங்காதபடிதிருவடிக்குப்பூசைசெய்யியம்புமுறையீடே.
முற்றிற்று.

**ஸ்ரீமத். மு. தம்பையாக்குருக்கள் அவர்களால்**
இயற்றப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



## ஆத்தியடி சுப்பிரமணியர்மேற் பதிகம்

காப்பு

கங்கைமதிச்செஞ்சடையோன் கட்பொறியில ் வந்தநாட்
டங்கு சரவணத்துச் சண்முகன்மேற் - பங்கமிலா
திப்பதிக முற்றடைய வீசனரு டந்திமுகன்
செப்புசரண் காப்புச் செகம்.

திருவதனமிருமூன்றுமீராறுதோளுஞ்சினத்தவடிவேலபயமுஞ்
சிலீமுகமுமங்குசம்வச்சிரங்கொடியோடுசிலைதண்டுமழுபங்கயம்
வரதமொடுமணியேறுபன்னிருகரங்களும் வலமிடந்தேவிமாதரும்
வந்திடுங்கோல்மேகாட்டியெனையாளுவாய்வந்தவடியாவர்க்கு
வரமருளுமுருகேசவள்ளலேதாரணைவாட்டியருளும்பர்கோனே
வல்வினையினேனவலமார்கலியினலையுண்டுவாட்டமுறலறிகிலாயோ
கரிமுககுற்றவொருவொருதம்பியேதிங்களணிகண்ணுதற்கினியமைந்தா
கவினாத்தியந்தளியன்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (1)

நீரினிற்குமிழன்னநிலையற்றககாயத்தைநிலையெனக்கருதிநாளும்
நித்தனேமுற்பவத்தொடர்பிலோமற்றெதோநெஞ்சினிற்கொண்டவெல்லாம்
பாரினிற்செய்துமேபாவியென்றுலகிற்பகிர்நிதிடும்பரிசுபெற்ற
பதடிக்குளாக்கினாய்பண்ணவர்க்கிறைவனேபத்தர்கட்குற்றவினையை
வோரோடழித்திட்டவேற்படைக்குரவனேவேதனுக்கன்றுதித்த
வீண்செருக்கோட்டியேபிரணவப்பொருடன்னைவிமலர்க்குரைத்தமுதல்வா
கார்குழற்றெய்வத்தையலைக்குறமகட்கன்னியைமணந்ததலைவா
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே (2)

உன்னைநானென்றுமுள்ளுருகிவந்தனைபுரிந்துன்னரியவாறெழுத்தை
உச்சரித்துனதன்பர்கூட்டத்தைநாடிடவுமுன்னடித்தொண்டுசெயவும்
பன்னுதமிழ்பாடிடுஞ்சத்தியுந்துன்பங்கள்பரவாதவின்பதிதையும்
பல்வளத்தோடுசுகசீவப்பெருமையும்பகைவர்வந்தடிபணிந்து
நன்னயம்பேசிடுதலைமையும்மன்னர்நல்வசிகரப்பேறுமிதய
நண்பர்சேய்மனையாதியேவர்க்குமன்னம்நயந்திடும்பவுழ்காதனும்
கன்னல்வின்மதனைக்காய்ந்தசிவபாலனேகாசினியிலெற்கருளுவாய்
கவினாத்தியந்தளியின்வடபாலாமர்நாணளகந்தசாமிக்கடவுயோ. (3)

பன்னிருபுயத்தோனேபயங்காசனன்றுபகரொணாப்பிரணவத்தைப்
பரமறகுரைத்திட்டபகவனேமலைமாதுபாலனேகார்த்திகேயா
என்னிருகண்மணியானகுமரவேளேமுருகவீசற்குகந்தமைந்தா
யினியமான்மருகனேயிருபத்தற்பாரணற்கிளையாகுறிஞ்சிவேந்தா
வன்னமயிலூர்ந்துவெஞ்சூருங்கிழியவேவடிவேலைவாக்குமுதல்வா
வாகுடன்செல்வமுங்கல்விகலைஞானமும்வளர்போகமாயுளுஞ்சீர்க்
கன்னினர்புயங்களுந்தென்னையாளுவாய்கருணாகரத்தெய்வமாய்த்
கவனாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாம்க்கடவுளே.



படிப்பகம்

www.padippakam.com



பொன்னகர்க்கிறைமகன்சூர்ச்சிறைப்பட்டுவெம்பொருமலைக்கேட்டிரங்கிப்
போந்துமேயஞ்சலென்றபயமீந்தவனுநீபோதீயிற்குகையகத்து
மன்குரிசில்நக்கீரனாற்றுப்படைக்கவன்வன்சிறையைநீக்கியாண்ட
வல்லவொருதேவுநீஞானமொடுகல்விகலையவ்வைக்ககத்தியற்குச்
சொன்னதேசிகனுநீவள்ளியைதினைவனஞ்சோர்வுசெய்வேடனும்நீ
சூருடல்கிழித்திட்டவெற்றிவேற்பெருமனீதோகையிலிவர்ந்துதெய்வக்
கன்னியைமணந்தமரரிடர்தீர்த்தகுமரனேகடையனேனிடர்தவிர்ப்பாய்
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (5)

செந்திவேன்முருகாதிருப்பரங்குன்றனேதிருவேரகத்திலமருஞ்
சிற்பரக்குழகனேதிருவாவினன்குடிச்சின்மயானந்தவடிவே
வந்தவடியார்க்கருள்வழங்குகாங்கேயனேவரைபகவெறிந்தகுமரா
வானவர்கடொழநின்றவண்ணமயில்வாகனாவள்ளியைத்திருடிநீலக்
கந்தமலர்தணிகைமலைசார்தெய்வயானைநற்காந்தாகுறிஞ்சிவேந்தா
கணபதிக்கிளையவாகுன்றுதோறாடலிற்கருணையொடமர்ந்தகுகனே
கந்துகம்பூட்டுதேர்ச்சேவலங்கொடியனேகழலையென்றலைசூட்டுவாய்
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (6)

எந்தநாளுன்னருட்சிந்துவின்மூழ்குவேனேழையேன்செய்தபாவ
மேகுநாளுள்ளதோவுன்னடிப்போதுநானென்றதான்புனைவனதோ
சந்ததமிடர்க்கடற்பட்டுறானலையவுஞ்சண்டனுக்காளாகவே
தற்காத்திடற்குனக்கன்புசற்றில்லையோசாமிநீயறியாததோ
பந்தமதரிந்திடும்பகவனீயல்லையோபராபரச்சோதிவடிவே
பண்ணவர்க்கருளுதவுமறமுகத்தண்ணலேபத்தர்கட்குற்றகுருவே
கந்தவகையைந்தினுங்கட்டுண்டுமாயாதுகருணைதந்தெனையாளுவாய்
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (7)

தாயிலாக்கன்றதைப்போனிலைகுலைந்துளந்தவித்திடுந்தனியன்யானுந்
தாவிப்படர்ந்திடக்கொழுகொம்பில்லாத்தனிக்கொடித்நிகர்த்தீண்டுநைந்து
தீயினிற்பட்டதோர்மெழுகுபோலென்றுமேசிந்தைமிககுருதியந்தோ
திகைத்துநின்றிடவுமுன்னருளதைக்காட்டிலாய்சிறியனேற்குய்வுமுண்டோ
நாயினுங்கடையனாய்நானிலத்தலையவோநாயகாவெனைவிதித்தாய்
நாகருக்குற்றவெவ்விடரினைப்போக்குமாஞாங்கர்கொள்ளறுமுகத்தோய்
காயமாருயிரினுக்யிரகிநின்றுமேகன்மவனுபோகமூட்டுங்
கவினாத்தியந்தளியின்வடபலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே.



படிப்பகம்

www.padippakam.com



தந்தைதாய்குருதெய்வமுனையன்றியிந்தச்சகத்துமிசைவேறுமுண்டோ
தருதிநீதனுகாணபுவனபோகங்களைசாருயிர்க்கன்மபேறாய்
வந்திடும்பாசமலநீக்கிடுங்கருணையின்மாயையாவையுமந்தோ
வரவோடுபோக்குறும்மியல்பவல்லாலின்னுமற்றுமோர்நிலையவாமோ
சிந்தையழுங்கிநின்றிங்ஙனமரற்றிடச்சித்தநிற்குண்டுகொல்லோ
சிவசுதாவெளியனேன்செய்பவப்பிழையவேசீர்பாதமீந்தருளுவாய்
கந்திமாகதலிவாய்வாய்க்காற்புளியடிக்கற்பகத்தாருநேர்ந்த
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (9)

சரவணதடாகத்தமர்ந்தாறுகார்த்திகைத்தாய்முலைப்பாலருந்தித்
தனித்தவடிவேற்குலிசமாதியாம்படையினைத்தாங்கியச்சூரனோடு
பொருதவனைவாட்டியுன்பாதமலர்சூட்டியும்புனிதர்சிறைமீட்டுமன்னோர்
பூங்கழற்றெய்வதக்களிறினைமணந்ததும்புணரிவாய்ச்செந்திவந்து
திருநிகர்ச்சுந்தரப்ராட்டியாம்வள்ளியைத்திருவதுவைசெய்துவேடர்
சீர்க்குலம்வாழ்ந்திடச்செய்ததுமுனக்கியற்றிருவருட்டெருமையன்றோ
கரியமால்பிரமனுந்தேடொணாச்சோதியாங்கண்ணுதற்றந்தகுமரா
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (10)

முற்றிற்று

**திரு.கோ.கணபதிப்பிள்ளை அவர்களால்**
1913-ம் ஆண்டில் கோவில்
முதல் கும்பாபிஷேகத்தின்போது
பாடப்பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com



## கொடியேற்றத்தன்று பண்களுடன் ஓத வேண்டிய தேவாரம்

(கொடித்தம்பத்தின் முன்னும் கோபுர வாசலிலும் எட்டுத்திக்கிலும் ஓதவேண்டியவை)

*இடம்: கொடித்தம்பம்* *பண்: தக்கராகம்*

மடையில் வாளைபாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென் கொலோ.

*இடம்: கொடித்தம்பம்* *பண்: காந்தார பஞ்சமம்*

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

*இடம்: பிரும்ம சந்தி (கோபுர வாயில்)* *பண்: மேகராகம்*

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டமே லுந்தி
அலமந்த போதாக அஞ்சலென் றருள் செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சி
சிலமந்தி யலமலந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே.

*இடம்: இந்திர சந்தி (கிழக்கு)* *பண்: காந்தாரம்*

மாதர்பிறைக் கண்ணியானை மலையான்
மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார்
ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா
றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறி
யாதன கண்டேன்.

*இடம்: அக்கினி சந்தி (தென்கிழக்கு)* *பண்: கொல்லி*

மானினேர் விழியாள் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வா யொருபாலனீங் கிவனென்று நீபரிபெய்திடேல்
ஆனமா மலையாதி யாயவிடங்களிற் பலவல்லல்சேர்
ஈனர்கட் கெளியேனல்லேன் திருவாலவா யரனிற்கவே.



படிப்பகம்

www.padippakam.com



*இடம்: யமசந்தி (தெற்கு)* *பண்: கௌசிகம்*

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

*இடம்: நிறுதி சந்தி (தென்மேற்கு)* *பண்: நட்டபாடை*

உ ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவிந்திரன் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் மறுமே.

*இடம்: வருணசந்தி (மேற்கு)* *பண்: சீகாமரம்*

கள்ளார்ந்த பூக்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானே ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயுவென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கடையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

*இடம்: வாயுசந்தி (வடமேற்கு)* *பண்: தக்கேசி*

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பா வெனநின்றே
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

*இடம்: குபேரசந்தி (வடக்கு)* *பண்: தக்கராகம்*

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள் தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும் வரங்கொடுத்தவனை வேட்டருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள்நடமாடும் பொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலய நல்லூர் காணே.

*இடம்: ஈசானசந்தி* *பண்: சாதனி*

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.



படிப்பகம்

www.padippakam.com



# ஆத்தியடி பிள்ளையார் கோயில்
# முருகப்பெருமான் தாலாட்டு

திருச்சிற்றம்பலம்

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
சீரார் சரவணப்பூஞ் சோலைமிசைப் பள்ளி கொள்ளும்
காரார் குலக்கொழுந்தே கதிர்வேலா கண்வளராய் (ஆராரோ)

ஆத்தியடிக் கோயிலிலே அன்னமயில் மீதமர்ந்து
அன்பர்களைக் காக்கவந்த அதிதீரா கண்வளராய் (ஆராரோ)

மாணிக்கக் கால்நாட்டி வச்சிர வடம்பூட்டி
ஆணிப்பொற் றொட்டிலின்மே லரிமருகா கண்வளராய் (ஆராரோ)

தெள்ளமிர்த கும்பமே தித்திக்குஞ் செங்கரும்பே
பிள்ளைவடி வோடுதித்த பெம்மானே கண்வளராய் (ஆராரோ)

கங்கை முடியணிந்த கங்காளர் தன்னருளா
லெங்களிடர் தீர்க்க வந்த வேந்தலரே கண்வளராய் (ஆராரோ)

அன்னம் நடைபயில அருங்கிளிகள் சொற்பழகப்
பன்னகப்பூந் தொட்டியிலே பாலகனே கண்வளராய் (ஆராரோ)

அரவணைப்பூம் பள்ளிதுயி லம்பான் மருகோனே
சரவணப்பூந் தொட்டிலிலேசாமிநீ கண்வளராய் (ஆராரோ)

அரம்பையர்கள் தாலாட்ட அன்னையுமை பாலூட்ட
வரம்பலவு மகிழ்த்தளிக்கும் வடிவேலா கணவளராய் (ஆராரோ)

தேவர் குலம்விளங்கத் தீயவுணர் தாந்தளரப்
பாவி வினைகழல (உமை) பாலகனே கண்வளராய் (ஆராரோ)

செல்வச்சிரஞ்சீவி சிவனுமையாள் கண்மணியென்
அல்லற் பிணியகற்றும் அருமருந்தே கண்வளராய் (ஆராரோ)

பாவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த பெருமானே கண்வளராய் (ஆராரோ)

பூந்தொட்டின் மீதேறிப் புவனம் புரக்கவந்த
காத்தன் மலரணியுமங் கடம்பவனா கண்வளராய். (ஆராரோ)



படிப்பகம்

www.padippakam.com



மேலைப்புலோலி ஆத்தியடி
விநாயகர் ஆலய முருகப்பெருமான்

# ஞான ஊஞ்சல்

நண்பான நெஞ்சுக்கே ஞானத்தை நன்றாகப்
பண்ணுடன் நான் கூறப் பாக்களால் – நண்ணரிய
சத்தியை சுற்றி வந்து தற்போத மாங்கனியைச்
சித்தியுடன் பெற்ற பிள்ளை காப்பு

சீர்மேவு மறைநான்கும் திறம்பெறுநற் றூண்களாகருக
ஏர்மேவு அறிவுடையார் இறுகியநல் விட்டமாக
வேர்மேவு பல்கலைகள் விரும்பியநற் கயிறதாகப்
பார்மேவு பிரணவமாம் பலகையிற் பொலிவுறூஉந்
தார்மேவு முருகனருள் தனிச்சோதி புகழ்பாடிக்
கார்மேவு அணிமயில்போற் கசிந்தூஞ்சல் ஆடாமோ.

பெருவெளியில் தெரிவரிதாய்ப்பெரியநாதம் பிறப்பிடமாய்
அருவுருவாய் நிறைபொருளாங் அருளானோர் உளங்கனிந்து
பொருடிளெனவைக்கும் முதற்பொருளாய் போதமான பொருளுரைப்ப
கருதமன்பர் பருகவந்த கனிரசமாம் மயில்வீரன்
அருந்தவஞ்செய் அகத்தியனுக் குரசெய்த வழியுணர்ந்து
நெருங்கியந்த வெளிக்குள்ளே நின்றூஞ்சல் ஆடாமோ

சிறுவனென்றே இகழ்ந்த சூரன் உடல் கிழித்தோன் திறம்பாடி
நறுமலர்த்தான் பணிகொண்ட நம்பிமகள் எழில்பாடிப்
பெறுமவற்றுட் பிறவாமை பெற வேண்டும் நலம்பாடி
உறுதுணையாம் அவன்பாதம் உணர்ந்து வேதப் பொருள்பாடி
அறுமுகமாம் நிலைகண்டும் அப்பொருளாம் முறைபாடி
இறுதியாதி விலாப்பெம்மான் அணைந்தூஞ்சல் ஆடாமோ.

சீலமிகு பெருந்துறையார் சிரமேற்கொள் சிரோமணியை
மாலறியா அயனறியா மதிக்கொணா மரகதத்தைப்
போலறிவோம் எனவுன்னிப் பொய்யுரைக்குஞ் சிறியோமைக்
கோலமுமாட் கொண்டருளும் குமரன்தன் விளையாட்டைச்
சாலவேநாம் இனிக்காணத் தருணமீது வெனப்பாடி
ஞாலமிகு சுடரொளியாம் ஞானவூஞ்சல் ஆடாமோ.



படிப்பகம்

www.padippakam.com



கண்கண்ட தெய்வமெனக் கதிர்காமதட் தலத்தினிலே
விண்ணவரும் மண்ணவரும் விரும்பியதைக் கொடுப்பானே
கண்ணாறு பாய்ச்சிடுஉங் காதலன் கண்டானேல்
வண்டாகத் துவண்டுஉம் மதிமயங்கி அடிபணிந்தால்
வண்ணமயில் அமர்திருந்தே எமதிடரை யழியானோ
பண்ணிசைக்கும் பசுங்கிளியே பணிந்தூஞ்சல் ஆடாமோ.

ஆத்தியடி அமர்ந்த வேலோன் ஆறிரண்டு புயங்களாட
சாத்திய பொன் முடிமின்னத் தாதளிபூந் தொடைகளாட
காத்திந்த தினைப் புனத்துக் கனியிதழ்வாய் வள்ளியாட
சேர்ந்தவெழில் நடைபயிலும் தெய்வானை மகிழ்ந்தாட
வாத்தியங்கள் முழங்கிடவே மங்கையர் இசைபாட
பூத்தடியார் பணிந்து போற்றும் பொன்னூஞ்சல் ஆடாமோ.

ஆறுமுகக் கம்பமதிற் பெருஞ்சுடராய் ஆடுகின்ற
நாறுமாலை யணிமார்பன் ஞானவேலைப் பிடித்தெங்கள்
மாறுபடு ஆணவமே மாயகன்மம் வதைத்துத்தான்
தேறுமுகன் கொடுத்தெம்மைச் செந்நெறியிற் சேர்த்தானே
வீறுமுகப் பெருங்குணத்தோன் வெற்றிவிழாக் கொண்டாடி
ஏறுமயில் வீரனையாம் ஏத்தியூஞ்சல் ஆடாமோ.

இருள் கொண்ட சூரபன்மன் வதையகண்டும் இறவாமல்
அருள்பெற்று நாளாறில் ஏறுமஞ்ஞை யானது போல்
மருள் நீங்கக் கமுமுனையை நோக்க நோக்க மந்திரமாம்
முருகனுயிர் ஆறெழுத்தை முன்னியாறு சந்திகளில்
உருவாக்கி யோதி னத்தால் ஓம்காரம் ஒலிக்கும்மே
அருவுருவாய் மன்னுமதில் அமைந்தூஞ்சல் ஆடாமோ.

அகரமாகி எழுதவைக்கும் முதலாய அணுவுமாகி
உகரமாகி உயிர்க்குயிராய் அகிலாண்டம் அனைத்துமாகி
மகரமாகி யொடுங்கி நிற்கும் ஓங்கார வடிவமான
குகனையாம் எந்த நாளும் குலித்தகமே குழைந்துருக
முகமலர்ந்து வருந்தேனை மொகுமொகேனப் பருகிடவே
சுகம் பெறலாம் தூங்காமல் தூங்கியூஞ்சல் ஆடாமோ.



படிப்பகம்

www.padippakam.com



# ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் வரலாறு

ஆ.சிவபாதசுந்தரம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவான்.

உலகங்கள் எல்லாம் (ஆன்மாக்கள்) உணர்தற்கும் இன்ன தன்மையர் என்றும் சொல்லுவதற்கும் அருமையானவர். பிறைச்சந்திரனை அணிந்த கங்கா நீரை உடையசடைமுடியும், அளவிலாத ஒளியுடையவராயும், திருச்சிற்றம்பலத்தே திருநடனம் செய்யும் சிலம்பு அணியப்பெற்ற மலர் போன்ற பாதங்களை வாழ்த்தி வணங்குவோம்.

உலகு எல்லாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் அதல, விதல, பாதாள என்று பகுக்கப்பட்ட உலகங்களிலே உள்ள மனிதர் தேவர், முனிவர் முதலாகச் சொல்லப்படுகின்ற உயர்வர்க்க ஆன்மாக்கள் எவலாலும் முற்று முழுதாக உணரவும் முடியாது உணர்ந்த சிலவற்றையாவது எடுத்து இயம்பவும் முடியாது. உணர்ந்து ஓதுதற்கரியதாயின் அ∴து அருவப் பொருளாகும். இறைவன் அருவமானவர்.

அடுத்து அலகில் சோதியன் என்று கூறுகின்றார் அளவிறந்த சோதிமயமானவர். சோதியை வெளிச்சம் என்றும் கூறலாம். சோதியைப் பார்க்க முடியும். வெளிச்சம் கண்ணுக்குத் தெரிகின்றது. அந்த வெளிச்சத்தின் வடிவம் எப்படிப்பட்ட வடிவம் என்று கூற முடியாது. எனவே இறைவன் அருஉருவம் உடையவர்.

நிலாவுலாவிய நீர்மலிவேணியன், அம்பலத்து ஆடுவான், மலர் சிலம்படி பிறைச்சந்திரனை, கங்கையை சடைமுடியிலே தரித்துள்ளார். கனகசபையிலே தமது மலர்ப்பாதங்களில் சிலம்பை அணிந்து திருநடனம் செய்கின்றார். அடியும், முடியும் பற்றி அழகாக இங்கு பேசப்படுகின்றது. எனவே உருவத்திருமேனி கொண்டவர்.

இறைவன் அருவமாய், அருவுருவமாய், உருவமாயும் உடையவர். அவரை வாழ்த்தி வணங்குவோம் என சேக்கிழார் பெருமான் மிக அழகாகக் கூறுகின்றார்.

இறைவன் உருவம் இல்லாதவர், உருவமுடையவராகவும் இருக்கிறார். அந்த உருவமோ பல என்ற சொல்லையும் கடந்து அப்பலவில் ஒன்றுதான் விநாயக வடிவம் பெருமானின் தோற்றம் வடிவம் பற்றிய கதைகளும் பலவாம். அரசமர, ஆலமர நிழலிலும், குளத்தடியிலும், வீதியிலும், சந்திகளிலும் விநாயக வழிபாடு செய்வதற்கு வசதியாக இன்று விரிந்துபட்டுக் காணப் படுகின்றது. எனினும் இவை எப்போது ஆரம்பமாகியது என்பதனை வரையறுத்துக் கூற முடியாது. எமது கிராமமத்தியிலும் விநாயக ஆலயம் இருந்துள்ளது. இந்தக் கோயில் ஆரம்ப வரலாறு



படிப்பகம்

www.padippakam.com



தோற்றம், தொடர்ச்சியாக உள்ள பிற்கால வரலாற்றை அறிய முடியவில்லை.

பருத்தித்துறை, புலோலி மேற்கு ஆகிய கிராமத்தில் கட்டாடிச் சீமா என்று அழைக்கப்படும் ஸ்தானத்தில் பிள்ளையார் கோயில் வழிபாடு இருந்துள்ளது. இ∴து அன்னியர்களாகிய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்களில் இந்துக் கோயில் வழிபாடு வழிபாட்டுக்கு தடைவிதிக்கப்பட்ட காலங்களில் அழிவுற்று இருக்கலாம் அல்லது இடிபட்டு தரைமட்டமாக்கப்பட்டிருக்கலாமென ஊகிக்கமுடிகின்றது. எம்முன்னோர்கள் அக்கால அன்னிய ஆட்சியின் கெடுபிடிகளுக்குப் பயந்து ஆலய வழிபாட்டினைக் கைவிட்டாலும், தாம் அன்றாடம் செய்யும் சமய அனுட்டானங்கள், கிரியைகள், விரத வழிபாடு முதலியவற்றை தவறாது தம் வீடுகள் தோறும் ஆட்சி அடக்கு முறையாளர்கள் அறியாவண்ணம் இரகசியமாகச் செய்து வந்துள்ளனர். கோயில் கட்டிடங்கள், செடி, கொடி புல் பூண்டால் மூடப்பட்டு விட்டது. கட்டாடிச்சீமாவென்று அழைக்கப்பட்ட இடத்தில் விநாயகர் ஆலயம் ஒன்று இருந்த அடையாளமே தெரியாமல் போய்விட்டது. இப்படியிருந்தபோதும் இக்கிராம அன்றைய சைவமக்கள் மானசீகமாக வழிபடத்தவில்லை. தம்தம் வீட்டிற்குள்ளேயே சமய அனுட்டானங்களைச் செய்து வந்தோர் பலர். அவர்ளுடைய தவப்பயனால் விநாயப் பெருமான் கனவில் தோன்றி பாழடைந்திருந்த கட்டாடிச்சீமா காணியில் இருக்கப்பெற்ற முன்னோரால் வழிபாடு செய்யப்பெற்ற இடத்தினை குறிப்பால் காட்டிநின்றார். மேலும் தம்மை வெள்ளானை வெள்ளாணில் ஆதி பல உருவங்களில் சொப்பனத்தில் காட்டியும் திருவாத்தித் திருவும் கார் வனப் பெருக்குமே தமது பழமை வாய்ந்த இருப்பிடமெனக் குறிப்பிட்டிருக்கின்றார். வால்கடைப் பரதேசியாகிய மகானது அருள்வாக்கு மூலமாக, கட்டாடிச்சீமாவென்னும் காணியில் ஆத்திமர நிழலின்கீழேயே பழமை வாய்ந்த கோயில் இருக்கப்பெற்றமையை அறிந்து விநாயகப் பெருமானை திருப்பெயர்ச்சி செய்து வாய்காற்புளியடி என்றும் புதிய ஸ்தானத்தில் (தற் காலத்தில் உள்ள இடம்) பிரதிஷ்டை செய்து வழிபடுவர்களாயினர் எம்முன்னோர்.

ஏறத்தாழ 1860ம் ஆண்டளவில், கட்டாடிச்சீமா வென்னும் ஸ்தானத்திலிருந்து, வாய்காற்புளியடியென்று கூறப்படும் (தற்போது கோயில் கொண்டு இருக்குமிடம்) ஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்து வழிபாடு ஆரம்பமாகியுள்ளது. கட்டாடிச்சீமாவாகிய காணியில் ஆத்திமர நிழலின் கீழ் இவ்விநாயகப் பெருமான் கண்ணுற்று கோயில் அமைக்கப்பட்டமையால் இவ்விநாயகருக்கு ஆத்தியடிப்பிள்ளையார் என்ற திருநாமமே வழங்கலாயிற்று. அப்பெயர் காலப்போக்கில் இவ்வூருக்கும் "ஆத்தியடி" என வழங்கலாயிற்று. அக்காலத்தில் சைவப் பண்பு மரவு தவறாத ஒழுக்க சீலராகவும், விநாயக வழிபாட்டில் ஈடுபாடு உள்ள பல பெரியோர் வாழ்ந்து வந்துள்ளமையை அறிகின்றோம். அவர்கள் இலை மறை காய்களாகவே இருந்துள்ளார்கள் அவர்களுள் வேலாயுத உபாத்தியாரும் ஒருவராவார் இவருடைய பெருமுயற்சியும் இக்கோயில் எழுந்தருளுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

இன்று கற்பக்கிரகம் அமைந்து இருக்கும் இடத்திலேயே விநாயகப் பெருமானது மூலஸ்தானம் அன்று அமைக்கப்பெற்றது, சிறிய மண்டபமும்



படிப்பகம்

www.padippakam.com



பனையோலையினால் வேயப்பட்ட கூரையும் பசுவின் சாணத்தினால் மெழுக்கிடப்பட்ட தரையுமாக இருந்துள்ளது.

ஸ்ரீமத் மு. தம்பையாக்குருக்கள் அவர்களே ஆத்தியடி விநாயகக் பெருமான் பூசகராகத் தொண்டாற்றும் பாக்கியசாலியாவார். இக்குருக்களை ஐயாமுத்துக் குருக்கள் என்றும் அன்புடன் பலர் அன்று அழைப்பார்களாம் இவர் சொத்திமுத்தர் என செல்லமாக அழைக்கப்பட்ட முத்தையா குருக்களின் ஏக புதல்வர் ஆவர். இக் குருக்கள் தற்காலத்தில் பூங்கொல்லை இருக்குமிடத்தில் சிறு மண்குடிசை கட்டி குடியிருந்து மிக எளிய முறையில் நித்திய, நைமித்திய பூசைகள் செய்து வந்துள்ளார். இவர் காலத்திலேயே ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலில் "கந்தபுராணப் படிப்பு, பிள்ளையார் புராணம், பிள்ளையார்கதை" முதலியன ஆரம்பமாகி இன்று வழிவழிமுறையாக நடந்து வருகின்றது.

மண்குடிசையும், பனையோலையால் வேயப்பட்ட கோயிலில் வீற்றிருந்து அருள்பாலிக்கப்பெற்ற விநாயகப் பெருமானை இவ்வூர் விநாயக அடியார்கள் 1901ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி பாலஸ்தாபனம் செய்து, அன்றைய சுப தினத்திலேயே புதிதாக அமைக்க உத்தேசித்துள்ள இடத்தில் அடிக்கல் நாட்டும் வைபவத்தையும் செய்துள்ளனர்.

தற்போது மடப்பள்ளி இருக்கும் இடத்திற்கு அருகாமையில் தெற்குப் பக்கமாக நின்ற பெரிய மாமரநிழலின் கீழ் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

கோயில் புதிய திருப்பணிவேலைகள் தொடங்கப் பெற்றபோதும் திருப்பணி வேலைகள் எதிர்பார்க்கப்பட்ட அளவு நடைபெறாமையை மக்கள் உணர்ந்து 1903 அல்லது 1904ம் ஆண்டளவில் திரு சந்திரசேகர் சபாபதிப்பிள்ளை (இவரை சின்னவியார் என்றும் செல்லமாக அழைப்பார்கள்) அவர்களின் தலைமையில் கூடி கோயில் திருப்பணி வேலைகளையும், நித்திய, நைமித்திய கருமங்களைச் செய்வதற்கும், மகாசபையொன்றை நிறுவினர் அச்சபைக்கு "ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபை" என்றும் பெயரிடப்படலாயிற்று. அன்று ஆரம்பிக்கப் பெற்ற சபை இன்று நூறு ஆண்டு வருடத்தினை (2004.03.31) நிறைவு செய்கின்றது.

ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர், முகாமையாளர் மற்றும் அங்கத்தவர்கள் காலத்துக்குக் காலம் பலர் செயற்பட்டாலும் சபை ஒழுங்கான முறையில் நடைபெற்று இன்று (100) நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் பெருமையுடன் விளங்குகின்றது. என்றால், அது ஆத்தியடிப் பிள்ளையாரின் அரும் பெரும் கிருபையே அன்றி வேறேதுமாக இல்லை.

முதல் முதலாக நிர்வாக தரும பரிபாலன சபை நிறுவியபோது திரு நீலயினார் தந்தப்பர் வேற்பிள்ளை அவர்களிடமே, கோயில் , பரிபாலன அலுவல்கள், முகாமைத்துவ அலுவல்கள் யாவும் பரிபால சபையினரால் ஒப்படைக்கப்பட்டது. இப்பெரியார் 1901ம் ஆண்டு தொடக்கம் 1913ம் ஆண்டு வரை திருப்பணி வேலைகளை ஊர்மக்களின் ஒத்தாசையுடன் செய்து (1913ம் ஆண்டு) பிரமாதீச வருஷம் கார்த்திகை திங்கள் 23ம் நாள் திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு மேல் மீன இலக்கினமும், ரேவதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேக வைபவத்தினை பூர்த்தி செய்துள்ளார் அன்று முதன் முதலாகச் செய்யப்பட்ட கும்பாபிஷேக சுபமுகூர்த்த



படிப்பகம்

www.padippakam.com



திகதியில் இன்று வரை வருடாவருடம் எம்பெருமானின் ஆலயத்தில் விசேட அபிடேகபூசை செய்யப்படுகின்றமை குறிப்பிடப்பாலதாகும்.

இக்கோயிலின் குருக்களாகக் பணிபுரிந்த ஸ்ரீமத் தம்பையாக் குருக்களின் சிரேஷ்ட புத்திராகிய தர்மலிங்கக் குருக்கள், முதல் கும்பாபிஷேகத்தின் பின்னர் நித்திய குருக்களாகக் தொண்டாற்றுவாராயினர். இக்காலத்திற்தான் பத்துநாள் அலங்காரத் திருவிழா, கந்தசஷ்டி, திருவெம்பா, நவராத்திரி, சிவராத்திரி முதலிய விசேட பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

திரு.கோ.கணபதிப்பிள்ளை அவர்கள் (ஜெயிலராக அரசசேவை புரிந்தவர்) திருவிழாக்கால எழுந்தருளி விக்கிரகங்களாகிய, விநாயகர், சுப்பிரமணியர், தெய்வானை, வள்ளியம்மை முதலியவற்றை செய்தவராகவும், விநாயக, சுப்பிரமணியப் பெருமான் மீது பாக்களை பாடியவருமாவார். ஸ்ரீமத் மு.தம்பையாக் குருக்கள் என்பெருமான் மேல் ஊஞ்சல் பாட்டு பாடியருளியுள்ளார்.

திரு.நீலயினார், கந்தப்பர்வேற்பிள்ளை அவர்கள் இக்கோயிலின் பரிபாலத்தினை கடந்த நூற்று ஆண்டு காலத்திற்குள் முதல் நாற்பது (40) வருடங்கள் வரை சிறப்பாக நடாத்தி தமது மூப்பு காரணமாக தமது இறைபணியை தொடர்ந்து செய்யும்படி திரு.ச.சோ.சரவணமுத்து அவர்களிடம் 1941ம் ஆண்டளவில் ஒப்படைத்து சிறிது காலத்தின்பின் இறையடியெய்தினார்.

ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபை அக்காலத்தில் ஏதாவது அவசிய தேவையேற்படின் அன்றி ஒரு ஒழுங்கான முறையில் திட்டமிட்டபடி இயங்காத நிலையிலும் இருந்திருக்கின்றது. ஒருசில விநாயக அடியார்களே கோயில் கருமங்களை கவனிக்க வேண்டியவர்களாகவும் இருந்துள்ளனர். இச்சர்சையால் 1941.12.27ம் திகதி தருமபரிபாலன மகாசபை திரு.மு.க.கந்தையா பிறக்டர் அவர்களின் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் திரு நா.வேலுப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும், திரு.க.தம்பிராசா திரு.வே.பரஞ்சோதி ஆகிய இருவர்களையும் உபதலைவர்களாகவும், திரு.ச.சிவகுருநாதர் அவர்களை பொருளாளராகவும், திரு.ச.சோ.சரவணமுத்து அவர்களை முகாமையாளராகவும் தெரிவு செய்து. இப்பெரியோர்கள் சுபானு வருடம் பங்குனித் திங்களில் (1943ம் ஆண்டு) பாலஸ்தாபனம் செய்து பெரிதளவான கட்டிட நிர்மாண வேலைகளைச் செய்துள்ளனர். இவர்கள் காலத்திலேயே கோயில் சுற்றுமதில், பெரும்பாலான கட்டிடங்கள் கட்டப்பட்டன. தாரண வருடம் ஆனித் திங்கள் 27ம் நாள் (1944ம் ஆண்டு) இரண்டாவது முறையாக புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் மிகச் சிறந்தமுறையில் சீரும் திருவும் பொலியச் ஸ்ரீ முத்துச்சுவாமிக்குருக்கள் தலைமையில் நிறைவுற்றது.

1945ம் ஆண்டு வரையுள்ள காலங்களில் விநாயகப் பெருமானுக்கு அலங்காரத் திருவிழாவே நடைபெற்று வந்துள்ளது.

1946ம் ஆண்டு திரு.ச.சோ.சரவணமுத்து அவர்கள் கொடித்தம்ப ஸ்தாபனத்தையும், ஸ்ரீ சபாபதிதேசிகர் யாகசாலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றுச்செய்து வழமையாக வைகாசி பௌர்ணமியில் தீர்த்த உற்வசவம் நிறைவுற நிகழ்ந்த அலங்காரத் திருவிழா, அவ்வாண்டு ஆனிமாத பௌணமியில் தீர்த்த உற்சவம் நிறைவுற்றது. முதல் கொடியேற்றத் திருவிழாவை திருவாளர்கள் நா.வேலுப்பிள்ளை, க.கு.சங்கரப்பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com



வ.சிவசுந்தரம் ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச்சங்கம்

ச.வேல்முருகு, க.வேலுப்பிள்ளை (தேர்உற்சவம்) பொ.வேலுப்பிள்ளை (தீர்த்தஉற்சவம்) ஆகியோர்கள் இனிது நிறைவு செய்துள்ளனர். இப் பெரியார்களே தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் கொடியேற்றத் திருவிழாக்களைச் செய்து வந்துள்ளனர். எனினும் காலப் போக்கில் திருவிழா உபயகாரர்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1947ம் ஆண்டில் இருந்து கொடியேற்றத் திருவிழா வைகாசி மாதத்திலேயே நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.இக்காலத்தில் புதிய திருப்பணி வேலைகளும் ஸ்தம்ப மண்டபமும் ஓடுகளால் அமைக்கப் பெற்றுள்ளது.

திரு.சங்கரப்பிள்ளை முருகேசு, திருமதி இலட்சுமிப்பிள்ளை இராமசாமி, திரு.த.வே.தாமோதரம், திரு நா.வேலுப்பிள்ளை, திருமதி மனோன்மணி வேலுப்பிள்ளை, திரு. ச.சோ.சரவணமுத்து, திரு.க.வேல்முருகு, திருமதி சீதேவிப்பிள்ளை குழந்தைவேலு, திரு.க.வேலுப்பிள்ளை திருமதி.அன்னபூரணம் வேலுப்பிள்ளை, திரு.ச.சிவகுருநாதர், திரு.சே.கிருஷ்ணசிங்கம், திரு.சோ.ச.சோமசுந்தரம், திரு.ப.நாராணயசாமி, திரு.வே.கந்தையா மற்றும் பல அடியார்களின் பொருள் உதவியாலும், சரீர உதவியாலும் உள்வீதி மண்டபங்கள், வெளிமண்டபங்கள் தூண்கள், சுவர்கள், கூரை அமைத்தல், சுவர் பூசுதல் கிணற்று வேலைகள் வாய்க்கால் திருத்த வேலைகள், விநாயகப் பெருமானின், முருகப் பெருமானின் வாகனங்கள், சகடை போன்ற பணிகள் நடைபெறும் வந்துள்ளது. காலம் சென்ற திரு.சண்முகம் குழந்தைவேலு, திரு.க.வேல்முருகு ஆகியோர் அக்காலத்தில் சிவாகம விதிமுறைகளைத் தெரிந்தவர்களாய் இருந்து ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் நித்திய, நைமித்திய, விசேட திருவிழாக்கள், சைவாகம விதிப்படி நடப்பதற்கு வழிகாட்டிகளாக இருந்து தொண்டாற்றி வந்துள்ளமை விசேடமாகக் குறிபிடப்பாலதாகும்.

1950ஆம் ஆண்டு தொடக்கம் 1960 ஆண்டு வரை பத்து ஆண்டுகளுக்கு மேல், ஸ்ரீலஸ்ரீ து.சிவசிதம்பரக்குருக்கள் இவ்வாலய அர்ச்சகராக சிறப்பாக தொண்டாற்றியுள்ளார். அவருடைய கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு ஆகிய சிறப்பான குணாதிசயங்களை போற்றாதாரில்லை. இவர் ஒரு சிறந்த முன்மாதிரியான குருக்களாவார்.

1960ஆம் ஆண்டு புதிதாக கொடித்தம்பம் ஒன்று திரு.முருகேசு சண்முகம்பிள்ளை அவர்களின் உபசரிப்பில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

1961ஆண்டிலிருந்து 1964ம் ஆண்டு வரை பல குருக்கள் சிறிது சிறிது காலத்துக்கு தற்காலிகமாகப் பூசை செய்தனர். அவர்களில் அயல் கிராமங்களில் உள்ள கோவில்களில் பூசகர்களாகிய ஸ்ரீலஸ்ரீ சி.சுப்பிரமணியக்குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் ஆகியோர் பூசை செய்து கொண்டு வருவார்களாயினர்.

1964ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1984ம் ஆண்டு வரை ஸ்ரீ சுதா சிதம்பரப்பிள்ளைக்குருக்கள் சிறப்பாக பூசை செய்வாராயினர். தொடர்ச்சியாக 20ஆண்டு காலம் வரை பூசை செய்த இக்குருக்கள் மூப்பினாலும், சரீர ஆரோக்கிய குறைவினாலும் தமது சிரேஸ்ர புத்திரியின் துணைவராகிய ஸ்ரீ ஆனந்தவிஷய மதியாபரணக் குருக்களிடம் 1985ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் கோயில் பூசைப்பணிகளைச் செய்யுமாறு ஒப்படைத்துள்ளார். எனினும் தமது இறுதிக்காலம் வரை மருமகனாருக்கு உதவியாக



படிப்பகம்

www.padippakam.com



கோயில் தொண்டு செய்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 1985ம் ஆண்டிலிருந்து இன்றுவரை மதியாபரணக்குருக்கள் சிறப்புடன் நித்திய, நைமித்திய பூசைகளை மிக அன்புடனும் பயபக்தியுடனும் செய்துவருகின்றார்.

பராபவ வருஷம் சித்திரைத்திங்கள் 25ம் நாள் (1966ம் ஆண்டு) விநாயகப் பெருமானின் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று திருப்பணிவேலைகள் செய்து பிலவங்க வருஷம் சித்திரைத் திங்களில் கூடிய மக நட்சத்திரத்தில் (1967.04.20) ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில், விநாயக பக்தராகிய சோ.ச.சோமசுந்தரம் அவர்கள் மூன்றாவது மகா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தி நிறைவு செய்தது விநாயக அருளினாலாகும். 1972ஆம் ஆண்டு திரு.இ. உருத்திரா நியாயதுரந்தர் அவர்கள் புதியதோர் விநாயக எழுந்தருளி விக்கிரகம் செய்து உபசரித்துள்ளார்.

திரு.க.வேலுப்பிள்ளை அவர் மனைவி அன்னபூரணம், மகன் பாலசுப்பிரமணியம், அவர்களின் இடையறா முயற்சியாலும் தொண்டினாலும் மற்றும் விநாயக அடியார்களின் உபசரிப்பு உதவியுடன் புதிய சித்திரத்தேர் உருவாகி 29.05.1977ம் திகதி வெள்ளோட்டம் நடைபெற்று 1977ம் ஆண்டிலிருந்து விநாயகப் பெருமான் சித்திரத் தேரிலேயே வீதியுலாவரும் அருள் காட்சியை நாம் கண்டு களிக்கக் கூடியதாகவுள்ளது. மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த திரு. பரமசோதி அவர்களே இச்சித்திரத்தேரின் பிரதம சிற்பாசிரியராகும்.

துந்துபி வருஷம் சித்திரை திங்கள் 13ம் நாள் (1982ம் ஆண்டு) விநாயகப் பெருமானின் பாலஸ்தான விழா நடைபெற்றுள்ளது. புனருத்தாரண பணிகள் இக்காலத்தில் செய்ததுடன் புதிதாக சண்டேஸ்வரப் பெருமானுக்கும் திரு.ச.கனகசபை அவர்களால் கோவில் கட்டப்பட்டு அப்பெருமானை ஆவர்த்தனம் செய்துள்ளனர். சண்டேஸ்வரப் பெருமானுக்குரிய எழுந்தருளி விக்கிரகத்தை திரு சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் உபகரித்துள்ளார். இதன் மேல் துந்துபி வருஷம் தைமாதம் 13ம் நாள் (26.01.1983ம்) நான்காவது தடவையாக மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நிறைவுற்றுள்ளது இக்குடமுழுக்கு விழாவை திரு.சண்முகநாதன் முகாமையாளராகவும், தொண்டாற்றி இனிது நிறைவேற்றியுள்ளார்.

1983ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேக பூர்த்தியின் மேல் நித்திய பூசையுடன் அதிகாலைப் பால்பூசையும் இக்கோயிலில் செய்வதற்கு திரு.சோ.ச.சோமசுந்தரம் அவர்கள் ஆலோசனை வழங்கியதுடன் அப்பூசைக்கு மேலதிகமாக ஏற்படும் செலவுக்கு ஈடாக வட்டி வரக்கூடியதாக வங்கியில் முதலீடும் செய்துள்ளார்.

1984ம் ஆண்டளவில் கோயில் கிழக்கு திசையில் வெள்ள வாய்காலால் வீதி சேதமுறா வண்ணம் திரு.நா.செந்திவேல் அவர்கள் அணைகட்டியும் திரு.விக்கினராஜா அவர்கள் இணைப்பு பாலத்தினையும் கட்டியுள்ளார்கள்

1985ல் திரு.க.இராமச்சந்திரன் அவர்கள் கொடித்தம்பத்திற்கு பித்தளை லோகத்தினால் கவசம் அமைத்துக்கொடுத்துள்ளார். திரு.ச.குகதாஸ் அவர்கள் நுனாம்பற்றை என்று அழைக்கப்படும் கோயிலுக்கு வடமேற்கே உள்ள காணியை கோயில் தருமபரிபாலன சபைக்கு நிந்தமாக அளித்துள்ளார். அத்துடன் தமது பெறுப்பில் இருந்துள்ள



படிப்பகம்

www.padippakam.com



இறுதியாத்திரை வண்டிப் பராமரிப்பு அத்துடன் தொடர்புள்ள அசைவுள்ள, அசைவற்ற சொத்து முதலியனவற்றையும் கோயில் தருமபரிபாலன சபையினரிடம் கையளித்துள்ளார்.

இவ்வாண்டில் புதிதாக தருமபரிபாலன சபையின் விதியுரைகளை திருவாளர்கள் வே.க.நடராசா, வே.ஸ்ரீஸ்கந்தவேல், மு.ச.முருகேசு, ஆ.சிவபாதசுந்தரம், ஆ.குமாரசாமி ஆகியோர்கள் கொண்ட குழுவால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. திரு.ஆ.வேல்முருகு அவர்கள் ஆத்தியடிப்பிள்ளையார் கோயிலுக்குரிய காணிகளான நுளும்பற்றை, கட்டாடிச்சீமா, வாக்கால்புளியடி ஆகிய சகல அசைவற்ற சாதனங்களையும், அக்காணிக்குள் இருக்கப்பட்ட கட்டிடம் முதலியவற்றையும் சிரமதானமாகச் செய்து சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

திருவாளர்கள் ச.நந்தகுமார், க.விக்கினராசா அவர்கள் நீர்இறைக்கும் யந்திரம் வழங்கியுள்ளார். மடப்பள்ளிக் கிணற்றிற்கு குழாய் அடித்து நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பொருத்தும் செலவை திரு.ஆ.முருகேசு அவர்கள் பொறுப்பேற்றார்.

திரு.ச.சபாபதிப்பிள்ளை அவர்கள் பிளாஸ்டிக் கொள்கலன்களில் நீர்தாங்கி வழங்கியுள்ளார்.இவற்றையெல்லாம் சிறப்பான முறையில் பொருத்தி தேவையான இடங்களுக்கு நீர் விநியோகிக்கும் வேலைகளை திரு.சி.தியாகராசா அவர்கள் சிரமதானமாகச் செய்ததுடன் முன்மண்டப முகப்புக்கு இரும்பு கேற்றும் தமது பொறுப்பில் அமைத்துள்ளார்.

திரு.கோ.இராசரத்தினம் அவர்கள் கொடித்தம்ப மண்டபத்துடன் இணைந்துள்ள தரிசன மண்டபத்துக்கு காகம் புகாமல் கம்பிவலை அமைத்துள்ளார். அர்த்த மண்டப வாசல் கதவுடன் இணைத்து காகம் உட்புகா வண்ணம் வலைப்பின்னல் கேற்றை திரு.கி.நடராசா அவர்கள் உபகரித்துள்ளார்.

1989ல் வசந்த மண்டப திருத்த வேலை செய்யப்பெற்று, தூபிகையும் கட்டி அபிடேகமும் செய்யப்பட்டுள்ளது. திரு.சி.சந்திரகாந்தன் அவர்கள் வசந்த மண்டப சுருக்குக்கேற் அமைத்துக் கொடுத்தார் திருமதி.சோ.மங்களேஸ்வரி அவர்கள் புதிய மனோன்மணி அம்மன் எழுந்தருளி விக்கிரகம் வழங்கியுள்ளார். 1992.09.09ல் இங்கு நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. 1992ம் ஆண்டளவில் கோயில் உள்வீதி முழுவதும் கூரை அமைக்கப்பட்டுள்ளது.

1993ல் திரு. த. இரத்தினம் அவர்கள் யானை வாகனமொன்று ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்தார்.

1994.11.14ல் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று பழுதடைந்து இருந்த தூபிகள், பொம்மைகள் முதலியன மேலும் செப்பனிடப்பட்டு புவவருடம் ஆவணி மாதம் 21ம் நாள் (1995.09.06) மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக்காலத்திலேயே நாகதம்பிரான் சுற்றுப்பிரகாரத்தில் அமைக்கப்பட்டு அபிஷேகமும் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தை உயர்பீடம் கிரியா கலாபமணி சிவஸ்ரீ ஸ்ரீகாந்தக்குருக்கள் சிறப்புறச் செய்து நிறைவேற்றியுள்ளர். இக்காலத்தில் தலைவராக ச.சிவசுப்பிரமணியம் அவர்களும், செயலாளராக ஆ.சோமசுந்தரம் அவர்களும், க.சண்முகநாதன் அவர்களும் முகாமையாளராகவும் அளப்பெரிய தொண்டாற்றி கும்பாபிஷேகத்தை நிறைவு செய்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com




ஐந்தாவது மகாகும்பாபிஷேகம் நிறைவுற்று 9வருடங்களின் பின் இன்று 31.03.2004ம் திகதி ஆத்தியடி பிள்ளையார் கோயில் தருமபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டு, நூறுவருடங்கள் பூர்த்தியாகின்றது.

ஊர்இல்லான், பெயரில்லான், உருஇல்லான் இறைவன், அப்படிப்பட்ட இறைவனுக்கு உருவம் உண்டாக்கி பல பெயர்கள் வைத்து ஊர் சொல்லி வழிபடுகின்றோம் அவ்வாறு செய்ய வேண்டியதும் வழிபாட்டுக்கு மிக அவசியமானதாகும். அவ்வாறே பல்லாண்டு என்னும் பதம் கடந்த பெருமானுக்கு நூறு ஆண்டு விழா கொண்டாட வேண்டியது வழிபாட்டுக்கு மிக மிக அவசியமாகும்.

பால், மண்பாண்டத்தில் கறந்து எடுத்தாலும், கொடுத்தாலும் பாலின் பெருமை, சிறப்பு குறைவது இல்லை. அஃது போல், சிற்றறிவினனாகிய நான் இவ்வாலயத்தின் வரலாற்றையும், அனுபவரீதியாகத் தெரிந்தவற்றையும் தருமபரிபாலன சபையின் கூட்ட அறிக்கையிலிருந்தும் ஆராய்ந்து தொகுத்து எழுதப்பட்ட ஆத்தியடிப்பிள்ளையார் கோயிலின் வரலாறு மென்மையான, பயனில்லாத புன் சொற்களால் தொடுத்து எழுதப்பட்டாலும் ஆங்காங்கு தவறுகள், குறைகள் இருப்பினும், வருங்கால சந்ததியினருக்கு உபயோகமுடையதாக இருக்கும் என்றபடியாலும், சபையோர்கள், பெரியோர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்களாக.

❀❀❀❀❀❀❀





படிப்பகம்

www.padippakam.com



# சமூகத்தில் சமயம்

செல்வி. யசோதா இராதாகிருஷ்ணன்
*இறுதி வருடம் (2004)*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

ஒருவரது வாழக்கையை செம்மைப்படுத்தும் சாதனங்கள் பல அவற்றுள் சமயமும் ஒன்று என கூறுதல் மிகையாகாது. சமயம் என்பதற்கு எத்தனையோ வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. "மனிதன் தனது வாழ்கையிலே ஏற்படும் இன்பதுன்பங்களிலிருந்து விடுதலை அடைவதற்கு சாதகமாயுள்ள வாழ்க்கை வழி சமயம்" என்றும் "மனிதன் தன் கீழான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு நற்சிந்தனைகளில் ஆழ்ந்து வாழ எடுத்துக் கொள்ளும் கிரயத்தனமே" சமயம் என்றும் பலவாறாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் சமயம் அவசியம் "சமயத்தை சமுதாயத்திலிருந்து எடுத்து விட்டால் மிஞ்சுவது காட்டு மிராண்டிகளின் கூட்டமே" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமயம் எனின் என்ன என்பதனை யாவரும் பொதுவாக அறிந்துள்ளனராயினும் சமயம் என்னும் பொருளின் உண்மையான தாற்பரியத்தை பொதுமக்கள் யாரும் சரிவர உணரவில்லை என்பதே உண்மையாகும். சிறு வயதில் சமயப்பதிகங்களையும் தேவாரங்களையும், கிரியைகளையும், புராணங்களையும் பற்றி கற்கும்போது பலர் இவைகளே சமயம் எனக் கொண்டு விடுகின்றனர். வளர்ந்து பெரியோரான பின்னரும் கூட இந்நோக்கு இன்றைய சமுதாயத்தில நிலைத்திருப்பதை காணமுடிகின்றது. மேற்கூறியவாறு கோயிலுக்கு சென்று வழிபாடு நடாத்துவோமாயின் சமயத்தின் கடமைகளை ஆற்றிவிட்டோம் என கருத முற்படுகின்றனர் பலர். ஆயினும் சமூக வாழ்வில் ஈடுபட்ட ஒருவன் கோயில் வழிபாடுகளை மட்டும் விதிப்படி ஆற்றுகின்றமையினால் உண்மைகளை சமயத்தை கடைப்பிடிப்பவன் ஆகின்றான். என்ற கூற்றை ஏற்கமுடியாது. சமயம் பற்றி விளக்க முற்பட்ட இந்திய தத்துவ அறிஞர். கலாநிதி இராதாகிருஷ்ணன் "மறை பொருள்கள் பற்றிய கல்வியையும் கிரியைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மையையும் அறிதல் மட்டும் சமயமாகிவிடாது" என சுட்டுதல் காணலாம். மேலும் சமயம் என்பது ஒரு வாழக்கை வழி என விளக்கம் தந்துள்ளார். சமூகவாழ்க்கையுடன் சமயம் தொடர்புறுகின்ற வேளை அங்கு உண்மையை கண்டறிதலும் உண்மையை உய்த்து அறியும் பிரதான அம்சங்களாகின்றன. இங்குதான் சமயம் எனும் பதத்தின் தாற்பரியம் தெளிவாகின்றது.

மனித மனத்தை புனிதமாக்கி நல் மனப்பாங்கை அமைத்து கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தை வகிக்கின்றது. இறைவழிபாடு, தியானம் மற்றும் பல்வேறு சமய சம்பிரதாயங்களும் மேற் குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முயல்கின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி தனது உள்ளத்தூய்மையை வலுவடைய செய்ய வேண்டும். சமயங்களின் உட்கிடைதான் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழி கொடுத்து உதவுகிறது. "எவ் எவ் வழிகள் மூலம் உங்கள் மனதை தூய்மையாக்க முடியுமோ



படிப்பகம்

www.padippakam.com



அவ் வழிகளை மேற்கொள்ளுங்கள்'' என இந்து சமயம் போதிக்கின்றது. இந்து சமயத்தை பின்பற்றுவோர் மட்டுமே ஈடேற்றத்தை அடையமுடியும் என கூறவில்லை. நதிகள் பலவாயினும் அவை இறுதியில் சமுத்திரத்தில் சங்கமிப்பது போலவும், விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே போலவும், வழிகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடி நிலையாக வைத்து மதங்கள் விளங்குகின்றன.

அடுத்து சமூகம் என்பது என்ன என்பதனை நோக்கும்போது தனி மனிதனில் தொடங்கி மனைவி மக்களிடம் படர்ந்து அன்பு முற்றி விரிந்து ஆற்றி பரந்து இனம் தழுவி ஒப்புரவாற்றி உற்றார்க்கும் மற்றையோர்களும் உதவும் நெறியிலே படர்ந்து கடைசியாக நாடு தாண்டி உலகளாவும் சென்று சேரும் தன்மையுடையது சமூகம். ஆழ்ந்த நோக்கின் சமூகம் என்பது தனிமனிதனை தாண்டி அப்பாற் சென்று உலகம், உலகமக்கள், உலக உயிரினங்களையும் சேர்த்து குறிக்கும். இங்கு மனித குலம் சாதியாலும், இனத்தாலும், நாட்டாலும் வேறுபட்ட மனப்பான்மை கொள்ளாது எல்லோரும் மனித குலத்தின் செல்வங்கள் என உயர்ந்த எண்ணம் கொள்ளவேண்டும் இதனையே அறம்வகுத்த வள்ளுவனும், பாரதியும் சுட்டி காட்டுகின்றனர். இதனையே இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன் வாழ்ந்த சங்ககாலப் புலவர் "யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்று சமூகத்தை வரையறுத்தார்.

சமயம் எப்படி சமூகத்தை வாழ வைக்கிறது என்பதை அறிதலே மிகவும் முக்கியமானது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்றும் சமூகவாழ்விற்கு அடிப்படையாக அமைகிறது. இதை சமயம் எவ்வாறு வற்புறுத்துகின்றது. என்பதை நோக்கும்போது சாதி என்றும், குலம் என்றும் பேசி மக்கள் இனத்தை வேறுபடுத்தும் பல கொடுமைகளை கண்டு நைகின்றார் நாவுக்கரசர். அதுவும் சமயத்தின் பெயரால் பல சாத்திரங்களை ஏற்படுத்திக் கொண்டு அதனை ஆதாரமாக கொண்டு குல, சாதி முறையை காட்டும் கொடுமையை அப்பர் கண்டிக்கின்றார். "குலம் இறைவன் புகழ் முன் இல்லை" என்கிறார். யாவர் புகழ்ந்தாலும் இறைவன் அவரே நல்வினையில் இருத்துவார் என்பது அவர்வாக்கு

"பாதியாய் அழகிய கால் கையரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்ற ஆழ்வார் வாக்கும், "உன் அயலவன் யார்?'' என்ற வினாவுக்கு கதை மூலம் யேசு அளந்த பதிலும் இக் கருத்தை தழுவியதாக உள்ளது.

பொருளாகப் பெறும் சமத்துமவ் மக்களை வாழ வைக்கும் ஒப்பிலா மருந்து எனலாம். செல்வர்கள் தம்மிடமுள்ள பொருளை புதைத்து வைக்காது வாழ்க வையகம் என வாரி வழங்குவார்களாயின் நிச்சயம் நாட்டில் பொருளதாதார சமத்துவம் தோன்றும் இதனை சமயத்தில் தேவாரம் போன்ற நூல்கள் கொடையும், ஒப்புரவும் சமூகத்தை வாழ வைப்பன என காட்டுகின்றன.

"இன்மையால் சென்று இரந்தார்க்கு இல்லை என்னாது
ஈந்துவக்கும் தன்மையார்'' என்பது சம்பந்தர் வாக்கு



படிப்பகம்

www.padippakam.com



'தாழா அறஞ்செய்யின்'' என்பது சுந்தரர் வாக்கு

இவை பொருளாதார சமத்துவம் பெற சமயம் காட்டும் அடிப்படை கொள்கையாகும்.

சமூகவாழ்வில் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் உண்மைச்சமயம் வேண்டுவது நல் ஒழுக்கத்தையே தவிர வெறும் சம்பிரதாயங்கள், சடங்குகளை அல்ல. இவ்வகையில் மனித உள்ளத்திலிருந்து சில தீய சக்திகள் அகல வேண்டும். அவை பொய், வஞ்சகம், வெஞ்சொல், புறங்கூறுதல், வீண் பொழுதுபோக்கல் முதலியனவாகும். இவை போன்ற தீய செயல்களும், நீங்கியதே சமய வாழ்வு அவ்வாழ்வே சமூகத்தை வாழ வைப்பதாகும்.

சமய வாழ்வை மேற்கொள்ள அவசியம் வேண்டப்படுவது கல்வியாகும். "கல்வி இன்றி கடவுள் இல்லை, சமயம் இல்லை என்று'' அன்றே அப்பர் கூறினார். ஆண்டவன் கற்றார் உள்ளத்தில் தான் வாழ்வார் என்றும் எனவே நாட்டிற்கு கல்வி அவசியம் என்று கூறுவதோடு

"கல்லாதார் மனத்தாலணுக கடவுள் தன்னை
கற்றார்கள் உற்று ஓடும காதலனே'' என்றார் அப்பர்.

கல்வி கற்பதோடு மட்டும் நின்று விடக்கூடாது. மனிவாசகர் கூட "கற்றாரை யான் வேண்டேன் கற்பனைவும் இனி அமையும்'' என்றார். கல்வி மட்டும் போதாது இன்னும் வாழ்வின் பல கொண்டும் பல தள்ளி வாழ்வதே கல்வியின் பயனாகும் என்பது அவர் கருத்து.

"உலகத்தோடு ஏட்ட ஒழுகல் பல கற்றும்
எல்லார் அறிவிலாதார்'' என்றார் வள்ளுவர்.

ஆகவே இந்து சமய அடிப்படை கருத்துக்களாகிய அன்பு, தன்மைன ஒறுத்தல், சமூகத்தை வாழ வைத்தல் என்பனவும் முக்கியமாக ஒருவரை சமூகத்தில் சிறப்பாக வாழ வழி வகுக்கின்றது.

உலகப் பெருங்சமயங்களுள் 'சனாதன தர்மம்' குறிக்கும் இந்து சமயம் உலகளாவிய மனிதப் பண்பினை உயிர்ப்பாக கொண்டதென விளக்கிய வீரபுருஷர் விவேகானந்தர் கூற்றுத்தான் இன்று பல பேரால் விளங்கிக் கொள்ளப்படுகின்றன. 'அன்பே கடவுள்' எனவும். 'உண்மையே கடவுள்' என திரும்ப திரும்ப கூறிய மகாத்மா காந்தி தன் வாழ்வில் அன்பையும், சத்தியத்தையும் இறுதி வரை காப்பாற்றினார். வாழ்வின் இறுதி நிலையிலும் தனக்கு பொல்லாங்கு செய்தவன் மீது அன்பு கொண்டவராக வாழ்ந்து மறைந்த மகான் காந்தி ஆவார். இத்தகைய அன்பு மனப்பான்மையை அடையப்பெறுவது சுலபமான விடையம் என காந்தி எவ்விடத்திலும் கூறவில்லை. ஆயினும் அன்பு நிறைந்தவனாக வாழவேண்டும் என்று எத்தனை பேர் எண்ணுகின்றனர்? தன் சுயநலத்தினை மட்டும் பேணாது பிறர் நலத்தினையும் பேண முயல்வதன் மூலம் அன்பை வளர்க்க முடியும் யாவரையும் அன்புடன் மதித்து நடாத்தும் பண்பை பகவத் கீதை போதிக்கிறது. 'லோக சங்கிரகம்' எனும் உலக ஒற்றுமைக்காக உழைப்பதற்கு முதற்கண் தேவையானது அன்புடன் கூடிய உள சிந்தனை ஆகும். ஆகவே உண்மைச் சமையிகள் கோயில் வழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகிய வற்றில் ஈடுபடுவது போல தமது உள்ளமும் அன்பு, சுயநலமின்மை



படிப்பகம்

www.padippakam.com



தியாக மனப்பான்மை, உண்மையான சேவை மனப்பான்மை என்பவற்றை வளர்க்க வேண்டும்.

"அரிது அரிது மானிடராதல் அரிது அதனிலும் அரிது கூன், குருடு, செவி நீங்கிப் பிறத்தல் அரிது........ பெறுதற்கரிய உடலைப் பெற்ற நாம் வாழ்வை இன்பமுடையதாக பெற வேண்டும்" என்றால் பசி காண்பான் ஆயினும் சான்றோர் பழிக்கும் செயலை செய்யாது எல்லாப் பிறவிகளுக்கும் பயன் தரக்கூடிய செயலை செய்யும் வாழ்க்கை பயனை செய்ய வேண்டும். திருமூலர் மிக எளிதில் எல்லோரும் செய்யக் கூடிய நாலு கடமையினை திருமந்திரத்தில் கூறுகிறார்.

"யாவர்க்குமாம் இறைவற்கொடு பச்சிலை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் பிறர்க்கொரு இன்னுரைதானே."

திருமூலர் கூறியது அனைவர்க்கும் பொருத்தமான சமயக்கோட்பாடாக கொள்ளத்தக்கவை இவற்றை கடைப்பிடிக்கும்போது இல்லறத்தான் மானிடப்பிறவியை விட்டு பேற்றினைப் பெறுபவனாகிறான்.

இன்று உலகளாவிய ரீதியில் நாடுகளில் இடம்பெறும் யுத்தங்களிற்கும் , அழிவுகளிற்கும், மக்களின் மனவிரக்தி, துன்பங்களுக்கும் மூல காரணம் ஆசை, வெகுளி, கோபம் போன்ற தீய சக்திகள்தான் எனவே சமயம் கூறுகின்ற இந்த நல்லெண்ணங்கள், செயல்களை ஒவ்வொரு மனிதர்களும் கைக்கொண்டு வந்தால் இன்று உலகில் துன்பதுயரம் என்ற சொல்லுக்கே இடமில்லை யாவரும் இன்பமாக எல்லோரும் ஒன்றாக நிம்மதியாக வாழ முடியும். எனவே சமயங்கள் கூறும் நல்ல கருத்தை மனதில் கொண்டுவந்தால் சமூகத்தில் நல்ல வாழ்வை அமைத்துக்கொள்ளலாம். இந் நற்பண்புகள் இன்றைய சமுதாயத்தில் இழையோடி நிற்கும்வரை உண்மை சமயம் அழிவற்று நிற்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே மனித வாழ்க்கையில் சமய வாழ்வு இரண்டறக் கலத்தல் வேண்டும் அக்கலப்பினால் தான் மனிதன் முழுவாழ்விற்குமான பக்குவத்தை பெறமுடியும்.. ஒருவர் வாழ்வில் செம்மைப்படுத்தும் சாதனங்களில் சமயமும் ஒன்று ஒருநாளைக்கு பலதடவைகள் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்வோரில் பலர் நெஞ்சில் "அன்பு" எனும் பண்பு சிறிதும் அற்றவராகவும் குரூர நடவடிக்கைகளை ஆற்றுபவர்களாகவும் இருக்க காண்கிறோம். சமயத்தில் உண்மையான எதிரிகளாக, "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்" என்பது போல இருப்பவர்கள் இவர்களே ஏனெனில் இவர்கள் சமயம் எனும் போர்வையின்கீழ் தமது சுயநல நோக்குகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்ய விளைகின்றன. இவர்கள் சமூகத்தில் பசுத்தோல் போர்த்த புலிகளாக உலாவுகின்றனர் என்பது கண்கூடு. இத்தகையோர் எத்தனை முறை கடவுளை வழிபடினும் இறையருளை பெறமாட்டார்கள் என்பது உண்மை. உண்மை சமயியானவன் தன் உள் அன்பு, தியாகம், சேவை மனப்பான்மை, சுயநலமின்மை ஆகிய நல்ல ஒழுக்கங்களை கொண்டிருத்தல் அவசியமாகும். இவ் ஒழுக்கங்களை உருவாக்குவதில் தெய்வ வழிபாடு உதவுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



எனவே முடிவாக நோக்குமிடத்து சமயமும் சமூகம் மக்கள் வாழ்வில் நகமும் சதையும்போல ஒட்டிவாழ்ந்து வருகின்றது. எனவே சமூகவாழ்வை செம்மையாக வாழ சமயம் அவசியமாகும். விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்ததுடன் அனைத்துநிலை அறிவுகளும் விஞ்ஞான பூர்வமான அறிவுகளாக பரிநாமித்துள்ள இக்கால சமூகங்களிலும் சமயங்கள் செழித்து வளர்வதற்குரிய காரணங்கள் அச் சமயங்கள் மனித சமூகத்திற்கு வழங்கும் பண்பாட்டினை மறைமுகமாக சுட்டி நிற்கின்றன. கோடி செல்வம் கொண்டிருந்தாலும் கோபுரத்தில் வாழ்வை நடத்தினாலும் நிரந்தரமற்ற இவ்வுலக மனித வாழ்வினை திருப்திப்படுத்த முடியாது போகின்றது. இவ்வுலக பொருட்களினால் திருப்தி அடையாத ஓர் மனிதனின் நிரந்தர திருப்திக்கான விளைவு அல்லது துடிப்பினை சமயங்கள் சித்திரிக்கின்றன. எல்லை ஒன்றின்மை எனும் பொருளதனை காட்டி நிற்கும் பண்பினதே சமயம் ஆகும். இச் சமயம் மனநிறைவையும், அமைதி பொங்கும் சாந்தியையும் வாரிவழங்க வல்லதாகும்.

எனவே மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால் சமயம் அவசியம் சமயத்தை சமூகத்தில் இருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டம் என விவேகானந்தர் கூறுவது உண்மையாகிவிடும் சமயம் எல்லா வேறுபாடுகளையும் நீக்கி சமயத்தை சமத்துவத்தில் ஒன்றிக் காண்கிறது. சமயம் சமூகத்தை வாழவைப்பதில் முன்னணி பெறுகிறது.

❀❀❀

பெற்றோர் தம் பிள்ளைகள் அனைருக்கும் பாரபட்சம் இன்றி அழிக்கக் கூடிய சொத்து தம் நன்நடத்தையும் கல்வி பெற வசதிகளுமே. பெற்றோர் தம் பிள்ளைகளையும் பெண்களையும் பிறர் எனப் பாராது உழைத்துப் பாடுபட்டு நாணயமாய் வாழ தகுதி பெறுமாறு செய்யப் பார்க்க வேண்டும்.

-மகாத்மா காந்தி-



படிப்பகம்

www.padippakam.com



# தரும பரிபாலன சபையின் பாதையில்.......

**செல்வன் ஆ.விஜயராம்.**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிளை போலு மெயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புத்தியில் வைத்தடி போற்றுகின்றேன்.

தரும பரிபாலன சபை தனது செயற்பாட்டு பாதையில் 100 வருடங்களை ஆத்தியடிப் பிள்ளையாரின் பெருமையினையும் புகழினையும் வெளிக்கொள்ளும் முகமாக நிர்வகிக்கப்பட்டு வந்தமையை எல்லோர் மனதையும் நெகிழும் வண்ணம் இட்டு சென்றுள்ளது. இவ் ஆலய சிறப்புக்களையும் முன்னெற்றதரமான செயற்பாட்டு வேகத்தினையும் நோக்குவோம்.

ஆத்திமர நிழலில் கட்டாடிச் சீமையில் ஆத்தயடி எனும் ஊரில் பருத்தி நகரிலே வடமராட்சியில் புகழ் பூத்த ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை. நம் முன்னோரின் பயன்களால் கனவில் வந்து குறிப்புணர்த்தங்களால் வெளிப்படுத்தி வழிபாடு செய்யுமாறு அருள் புரிந்தார். அவ்வகையில் இப் பிள்ளையாரானது அந்நிய ஆட்சி காலத்திற்கு முற்பட்டதாக இருந்தமைக்கான சான்றுகள் காணப்பட்டன. 1860ம் ஆண்டளவில் வேலாயுத வாத்தியாரின் கனவில் தோன்றி தற்போதைய ஆலய அமைவிடத்திற்கு பிரதிஸ்டை செய்து வழிபடும்படி அருள் புரிந்தார்.

ஆரம்ப காலத்தில் (1860 முன்னர்) சாணத்தினால் மெழுகப்பட்டு ஓலையிலால் வேயப்பட்ட கூரையின் கீழ் வழிபட்டு வந்தார்கள். மீண்டும் 1901ம் ஆண்டு பங்குனித் திங்கள் 30ம் திகதி புதிதாக நிர்மாணிக்கப்பதற்காக அடிக்கல் நாட்டினர். 1904.03.02 அன்று நடத்தப்பட்ட கூட்டத்திலேயெ இக் கோவிலை நிர்வகிக்கும் சபைக்கு "ஆத்தியடி பிள்ளையார் கோவில் தரும பரிபாலன சபை□ என பெருடன் செயற்பட வேண்டும் என 138பேர் பங்குபற்றிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. 1904 சித்திசை மாதம் கூடிய கூட்டத்தில் ஒவ்வொரு தமிழ் ஆண்டுத் தொடக்கத்தில் வருடப் பிறப்பு கழித்து வரும் முதல் வெள்ளி கிழமை விநாயகருக்கு விசேட பூசையுடன் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டது. அதற்கிணங்க இன்று வரை அவ்வாறே நடைபெற்று வருகின்றது.

பிரமாதீச வருடம் கார்த்திகைத் திங்கள் 23ம் நாள் (1913) பகல் 12 மணிக்கு மீன லக்கின ரேவதி நட்சத்திரத்தில் சைவ ஆகம் விதிப்படி மகா கும்பாபிஷேகம் முதற் தடவை நடைபெற்றது. 1914 தொடக்கம் 1943ம் ஆண்டு வரை ஏடுகளை சரியாக வேணப்படவில்லை. என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மீண்டும் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் 1943ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பெரிதளவிலான நிர்மாண பணிகளுடன் (1944) தாரண வருடம் ஆனித் திங்கள் 27ம் நாள் சிறப்பாக நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com



02.04.1945ல் இதுவரை காலமும் நடை பெற்று வந்த அலங்கார திருவிழாவை கொடியேற்ற திருவிழாவாக மாற்றியமைத்தது. அதற்கான 1946ல் ஸ்தம்ப மண்டபம் ஓடுகளால் வேயப்பட்டதாக அமைக்கப்பட்டது. இவ்வாறு பரிபாலன சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகையில் 1954ம் ஆண்டு எழுந்தருளிப் பிள்ளையாரின் அங்குஷம் முறிந்தது. அதனை மீண்டும் ஒட்டி அபிஷேகமும் செய்தனர். இது சபை வரலாற்றில் மறக்க முடியாத துன்பகரமான செய்தியாகும். இது வரை காலமும் மின் விநியோகமற்றுக் காணப்பட்ட குறை 16.04.1956ல் நிவர்த்திட செய்யப்பட்டது. 1960ல் கூட்டுப்பிரார்த்தனையும் ஆரம்பித்து வைத்தனர்.

பராப வருடம் சித்திரைத் திங்கள் 25ம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பிலவங்க வருடம் சித்திரை திங்கள் மக நட்சத்திரத்தில் (20.04.1967) மூன்றாவது கும்பாபிஷேகத்தை இனிதே செய்து முடித்தது. 1972ல் புதியதோர் எழுந்தருளி விநாயகரை அடியார் ஒருவரினால் உபயம் செய்யப்பட்டது. இவ் விக்கிரகமே தற்போது திருவிழாக்காங்களில் எழுந்தருள்வது குறிப்பிடத்தக்கது. 31.12.1974ம் ஆண்டு இந்தியாவில் இருந்து பெண் யாத்திரிகள் இவ் ஆலயத்திற்கு தவ்நத விசேட பூசை செய்து பிரார்த்தனை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1975ம் ஆண்டு நொனாம்பற்றை காணி சட்டரீதியாக நன்கொடையாக ஆலயத்திற்கு வழங்கப்பட்டது.

29.08.1976ல் விநாயகப் பெருமான் தோன்றிய கட்டாடிச்சீமை காணி விற்க இருந்த முயற்சி விநாயகப் பெருமானின் லீலையால் தடைப்பட்டது. 29.05.1977ல் பலரின் முயற்சியால் புதியதோர் சித்திரத்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது. 1980ஆம் ஆண்டு மாசி மகத்தில் தீர்த்மான சென்றது. 26.04.1982ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 13ம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆலய அமைப்பிற்கேற்ப களஞ்சியசாலை, குருக்கள் அறை விஸ்தரிக்கப்பட்டு சண்டேஸ்வர மூர்த்திக்கு புதிதாக ஸ்தானம் அமைக்கப்பட்டு 26.01.1083ல் நான்காவது மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1983ம் ஆண்டிலிருந்து பூசகருக்கு மாதம் 30 கொத்து அரிசியும் ஒரு கலன் தேங்காய் எண்ணெயும் வழங்கும் வழக்கம் கொண்டுவரப்பட்டது. அவ்வாண்டிலேயே இரண்டாவது தடவையும் கட்டாடிச்சீமையை விற்கும் நிலை ஏற்பட்டது. விநாயகரின் அருளால் தடைப்பட்டது.

15.07.1984ல் இறுதியாத்திரை வண்டி இச் சபையினால் பொறுப்பேற்கப்பட்டது. தற்போதும் செயற்பட்டு வருகின்றது. 1985ல் கொடித்தம்ப கவசம் இடப்பட்டது. இவ்வாண்டில் முன் மண்டபத்திற்கு கேற் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 1987.06.02ல் நடைபெற வேண்டிய கொடியேற்ற திருவிழா இராணுவ ஊரடங்கு சட்டம் கெடுபிடி காரணமாக நடைபெறவில்லை. அதனால் பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு ஆவணி சதுர்த்தி திருவிழாவும் நடைபெற்றது. இக் கொடியேற்ற திருவிழா நடைபெறாததால் 1988ம் ஆண்டு கொடியேற்றத்திற்கு முன்னர் □சம்பிரோஷண□ அபிஷேகம் செய்யப்பட்டு கொடியேற்றத் திருவிழாவும் நடைபெற்றது.

1989ம் ஆண்டு புதிய வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு குடமுழுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. 1991ல் புலோலி மத்தி கிராம எல்லைக்குள் இருந்ததை பருத்தித்துறை மாநகர எல்லைக்குள் மாற்றியமைத்தமையை மீண்டும் கிராம எல்லைக்குள் கொண்டுவர முயற்சித்தனர் அது பயனளிக்கவில்லை. இது பற்றி அரசாங்க அதிபருக்கு மகஜர்



படிப்பகம்

www.padippakam.com



அனுப்பப்பட்டதன் பிரகாரம் 31.01.1922ல் மிண்டும் புலோலி மத்தி கிராம எல்லைக்குள் அரும் பெரும் முயற்சியால் கொண்டு வந்தார்கள். இவ்வாண்டில் ஸ்ரீ மனோன்மணி அம்பாளினை (09.09.1992ல்) ஆவணித் திங்கள் 25ம் நாள் பிரதிஷ்டா அபிஷேகத்துடன் 12நாள் மண்டலாபிஷேகத்துடன் கிராம பிரதட்சணத்துடன் கங்கா அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

(03.02.1992)ல் 60 அண்டிற்கு ஒரு முறை வரும் மகோதய தீர்த்தமும் (18.02.1992)ல் 12 வருடத்திற்கு ஒரு முறை வரும் மகாமகத் தீர்த்தமும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மடைப்பள்ளி, தரிசன மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறே கட்டாடிச் சீமையில் ஆத்தியடி சனசமூக நிலையத்திற்கென காணியில் 1/2 பரப்பு 30.09.1994ல் இச் சபையினரால் கொடுக்கப்பட்டது. பவ வருடம் ஐப்பசி மாதம் 27ந் திகதி (13.11.1994) பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. யுவ வருடம் ஆவணி மாதம் 21ம் திகதி (06.09.1995) பூர்வபக்க பக்ஷ துவாதசியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப வேளையில் எம்பெருமானின் ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இதனை சிறப்பிக்கும் முகமாக கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வாண்டில் நாயதம்பிரானுக்கு மண்டபமும் அமைக்கப்பட்டு தெற்கு, பக்க நீளம் ஓடுகளால் வேயப்பட்டதாக மாற்றப்பட்டது. கும்பாபிஷேக நாளில் சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி தங்கமெடல் அணிவித்து கிரியாதத்துவ சிரோண்மணி என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்துடன் ஆலய பிரதம குரு மதியாபரணக்குருக்களுக்கும் பொன்னாடை போர்த்தி தங்கமெடல் அணிவிக்கப்பட்டது. இவர்களுடன் தவில் வித்துவான் சின்னசாராாவிற்கும் பொன்னாடை போர்த்தி தங்க மெடல் அணிவிக்கப்பட்டது. இவ்வாறே 15.10.1995ல் நடைபெற்ற சபை கூட்டத்தில் சதுர்த்தி விசேட பூசை உள் வீதி திருவிழாவாக நடைபெற வேண்டும் என கூறப்பட்டது. அதற்கிணங்க தற்போதும் நடைபெற்று வருகின்றது.

27.04.1997ல் மின்பிறப்பாக்கி அன்பளிப்பு செய்யப்பட்டது. இது 07.08.1997ல் ஆலய குருக்களின் துவிச்சக்கர வண்டியும் சிறிதளவு பணத்தொகையுடன் களவு போனது. இதனை கொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் எவ்விதமான பயனும் கிடைக்கவில்லை. 1998ல் மேற்கு பக்க உள் வீதிக்கு மேற்கூரை இடப்பட்டது. இவ்வாண்டில் ஆலய எல்லைக்கு கம்பி பாதுகாப்பு வேலி மீளமைப்பு செய்யப்பட்டது.

இறுதியாத்திரை வண்டியையம் தருமபரிபாலன சபையே பரிபாலித்து கொண்டு வருகிறது. சைவமறை முன்பள்ளியை பாதுகாத்து வருடந்தோறும் நடைபெறும் விளையாட்டு போட்டிக்கு உதவி செய்கிறது. 03.07.1999ல் கூடிய சபையில் மற்றொரு புதிய சேவையினை வழங்க முன் வந்தது ஆலயத்திற்கு சொந்தமான நுளாம்பற்றைக் காணியை மத்திய மருந்தகம் நிர்மாணிப்பதற்கு அரசாங்க சுகாதார திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்கியது. இதற்கு தலைவராக பேராசிரி-யர் ஏ.மு கனகலிங்கம் செயலாளராக க.சண்முகநாதன் கொண்ட நோயாளர் நலன்புரி சங்கம் பொதுமக்களிடம் இருந்து சேகரித்த கிட்டத்தட்ட ஒரு இலட்சத்தினை சபைக்கு வழங்கியது. இங்கு கடமையாற்றிய டாக்டர் முத்துக்குமாரசுவாமி அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



வேண்டுகோளில் காணினை எவரும் வழங்கவில்லை. இவ்வாறு சபை வழங்கிய பின்னர் கட்டட வேலைகள் சுகாதார திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வேளையில் பொதுமக்களின் நன்மைக்காக சபை நன்கொடையாக வழங்கியது வதறு என சபைக்கு தொடர்பில்லாதவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனால் இடை நிறுத்தப்பட்டது. இப்போது வழக்கு நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதால் கட்டட நிர்மாண வேலையை தொடரும்படி வேண்டுகின்றோம்.

சித்தரை 2000ல் பூங்கொல்லை மேற்கு வடக்கு ஆகிய பக்கங்களிற்கு சுவர் கட்டி எழுப்பப்பட்டது. அதுமட்டுமன்றி ஆலய தேவைக்கென வாழை, மா, ரோஜா மற்றும் பல பூ மரங்களும் நாட்டப்பட்டு பேணப்படுகின்றது. 29.04.1001ல் வடக்கு பக்க பூங்கொல்லை சிவரும் வெளி கிணற்றில் இருந்து பூங்கொல்லைக்கு நீர்ப்பாசன வசதியும் செய்யப்பட்டது. அதுமட்டுமன்றி மஞ்சம் செய்யப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. வெளி வீதி முழுவதும் தார் போடப்பட்ட வீதி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 2002ம் ஆண்டு பூங்கொல்லைக்கான பெரிதான நீர் தொட்டியும் பலவர்ண ரோஜாக்களும் நாட்டப்பட்டன.

2004ம் ஆ ண்டு ஆலயத்திற்கு சொந்தமான இறுதி யாத்திரை வண்டிக்கு அண்மையில் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இவ்வாண்டு மீண்டும் மாசிமகத்திற்கு சமுத்திரத்தில் நீராட சென்றது. மின்பிறப்பாக்கியும் அன்பளிப்பு செய்யப்பட்டது. 1982ம் ஆண்டு ஆயுட்கால அங்கத்துவ சந்தாவாக 250/- அறவிடப்பட்டு வந்தது. தற்போது 2000/- பணமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை விட பூசகருக்கும் இலங்கை வங்கியில் தேசிய இளைப்பாற்றும் சம்பளத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒலிபெருக்கியும் வாங்கப்பட்டது.

இவ்வாறு 100 வருடமன் நடைபெற்ற தரும பரிபாலன சபையை நிர்வகித்தவர்களையும் ஒரு முறை பார்க்கப்பட மற்றும் போற்றப்பட வேண்டியவர்களே அவர்களின் விபரம் வருமாறு.

தரும பரிபாலன சபையின் ஆரம்ப காலம் (19045)
அக்கிராசனாதிபதி-ஸ்ரீ.ம.முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்
உப அக்கிராசனாதிபதி.ஸ்ரீ.வை.வேலாயுதம்
லேககராகர்.-தமோதிரம்பிள்ளை சிவப்பிரகாசம்.
(1914 - 1941 அண்டுவரை ஏடுகள் சரியாக பேணப்படவில்லை)



படிப்பகம்

www.padippakam.com



| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் | முகாமையாளர் |
|---|---|---|---|---|
| 1941 | நா.வேலுப்பிள்ளை | க.வேல்முருகு | ச.சிவகுருநாதர் | வே.கதிரமலை |
| 1942 | நா.வேலுப்பிள்ளை | ச.கணபதிப்பிள்ளை | ச.சிவகுருநாதர் | க.தம்பிராசா |
| 1944 | க.வேல்முருகு | ச.கணபதிப்பிள்ளை | வே.கதிரமலை | ச.சிவகுருநாதர். |
| 1945 | நா.வேலுப்பிள்ளை | சு.சிதம்பரப்பிள்ளை | வே.கதிரமலை | சி.வேலாயுதம் |
| 1946 | க.தம்பிராசா | க.ஆறுமுகம் | ச.சிவராமலிங்கம் | சி.வேலாயுதம் |
| 1947 | சோ.சரவணமுத்து | க.ஆறுமுகம் | சி.குகதாஸ் | ச.சிவகுருநாதர். |
| 1948 | க.வேலுப்பிள்ளை | வ.சிவசுந்தரம் | சி.குகதாஸ் | ச.சிவகுருநாதர். |
| 1949 | நா.வேலுப்பிள்ளை | ச.குகதாஸ் | ச.கணபதிப்பிள்ளை | க.வேரகதிப்பிள்ளை |
| 1950 | வே.பரஞ்சோதி | சே.கிருஷ்ணசிங்கம | ச.கணபதிப்பிள்ளை | க.வேரகதிப்பிள்ளை |
| 1951 | ச.சந்திரசேகரம் | க.ஆறுமுகம் | ச.கணபதிப்பிள்ளை | க.வீரகத்திப்பிள்ளை |
| 1954 | க.வேல்முருகு | க.ஆறுமுகம் | ச.கணபதிப்பிள்ளை | ச.சிவகுருநாதர். |
| 1957 | க.வேல்முருகு | க.ஆறுமுகம் | ச.கணபதிப்பிள்ளை | வே.திருநாவுக்கரசு. |
| 1958 | க.வேல்முருகு | க.ஆறுமுகம் | ச.கணபதிப்பிள்ளை | ச.சந்திரசேகரம் |
| 1959 | க.வேல்முருகு | சே.கிருஷ்ணசிங்கம் | ச.கணபதிப்பிள்ளை | ச.சந்திரசேகரம் |
| 1960 | க.வேல்முருகு | சே.கிருஷ்ணசிங்கம் | ச.கணபதிப்பிள்ளை | ச.சோமசுந்தரம் |
| 1965 | க.வேல்முருகு | சே.கிருஷ்ணசிங்கம் | ச.கணபதிப்பிள்ளை | ச.சிவசுருநாதர் |
| 1969 | க.வேல்முருகு | சே.கிருஷ்ணசிங்கம் | ச.கணபதிப்பிள்ளை | சே.வேல்முருகு |
| 1970 | க.வேல்முருகு | பொ.பரமநாதன் | சே.கிருஷ்ணசிங்கம் | இ.சந்திரசேகரம் |
| 1971 | க.வேல்முருகு | ச.முருகேசு | ச.சோமசுந்தரம் | சே.கிருஷ்ணசிங்கம் |
| 1972 | க.வேல்முருகு | ச.முருகேசு | ச.சோமசுந்தரம் | இ.சந்திரசேகரம் |
| 1973 | ச.சந்திரசேகரம் | க.சண்முகநாதன் | கோ.சிவபாலன் | இ.சந்திரசேகரம் |
| 1974 | ச.சந்திரசேகரம | க.சண்முகநாதன் | ச.நல்லநாதன் | சே.வேல்முருகு |
| 1975 | வே.திருநாவுக்கரசு | க.சண்முகநாதன் | வே.கந்தையா | சே.வேல்முருகு |
| 1976 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | சே.வேல்முருகு |
| 1977 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | சி.வேலாயுதம் |
| 1978 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | ஆ.சோமசுந்தரம் |
| 1980 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | ச.சிவசுப்பிரமணியம் |
| 1981 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | வே.கந்தையா |
| 1982 | ச.சிவராமலிங்கம் | க.சண்முகநாதன் | வே.கந்தையா | இ.சந்திரசேகரம் |
| 1983 | சே.வேல்முருகு | சு.நடநாஜா | வி.வேல்முருகு | ச.சிவசுப்பிரமணியம் |
| 1984 | ச.சோமசுந்தரம் | ஆ.குமாரசாமி | ஆ.சிவபாதசுந்தரம் | க.சண்முகநாதன் |
| 1985 | ச.சோமசுந்தரம் | ஆ.சிவபாதசுந்தரம் | ச.சபாபதிப்பிள்ளை | க.சண்முகநாதன் |
| 1986 | சே.வேல்முருகு | ஆ.சிவபாதசுந்தரம் | ச.சபாபதிப்பிள்ளை | க.சண்முகநாதன் |
| 1987 | வே.முத்துக்குமாரசாமி | ஆ.சிவபாதசுந்தரம் | ச.சபாபதிப்பிள்ளை | க.சண்முகநாதன் |
| 1988 | ப.நாராணயசாமி | ஆ.சிவபாதசுந்தரம் | ச.சபாபதிப்பிள்ளை | க.சண்முகநாதன் |
| 1989 | க.நடராசா | ஆ.சிவபாதசுந்தரம் | ச.சபாபதிப்பிள்ளை | க.சண்முகநாதன் |
| 1990 | க.நடராசா | ஆ.சிவபாதசுந்தரம் | ஆ.ரவீந்திரன் | க.சண்முகநாதன் |
| 1992 | வே.முத்துக்குமாரசாமி | ஆ.சோமசுந்தரம் | ஆ.ரவீந்திரன் | க.சண்முகநாதன் |
| 1994 | க.சிவசுப்பிரமணியம் | ஆ.சோமசுந்தரம் | ஆ.ரவீந்திரன | க.சண்முகநாதன் |
| 1998 | க.சிவசுப்பிரமணியம் | ஆ.சோமசுந்தரம் | சோ.கனகசுந்தரம் | க.சண்முகநாதன் |
| 1999 | க.சிவசுப்பிரமணியம் | ஆ.சோமசுந்தரம் | சோ.தங்கேஸ்வரன் | க.சண்முகநாதன் |
| 2001 | ஆ.வேல்முருகு | ஆ.சோமசுந்தரம் | சோ.தங்கேஸ்வரன் | க.சண்முகநாதன் |

(இவர்கள் இன்றுவரை பணியாற்றுகின்றார்கள்)



படிப்பகம்

www.padippakam.com



தற்போதைய தரும பரிபாலன சபை உறுப்பினர்கள்
தலைவர்-திரு.ஆ.வேல்முருகு
உபதலைவர்-திரு.ச.சுப்பிரமணியம்
செயலாளர்-திரு.ஆ.சோமசுந்தரம்
உபசெயலாளர்-திரு.ஆ.சிவபாதசுந்தரம்
பொருளாளர்-திரு.சோ.தங்கேஸ்வரன்
உபபொருளாளர்.-திரு.தே.வாசுதேவன்
முகாமையாளர்-திரு.க.சண்முகநாதன்
உபமுகாமையாளர்-திரு.சோ.கனகசுந்தரம்

செயற்குழு உறுப்பினர்-07
கணக்காய்வாளர்-02
வெளியூர் உறுப்பினர்-04

இதனைவிட சட்டபூர்வமான ஏடுகள் இல்லாமையினால் ஆலயத்திற்கு சொந்தமான □குங்குமம்பாதி□ என அழைக்கப்படும் காணி கல்லூரி வீதிக்கு அண்மையில் உள்ளதாக கூறப்படுகின்றது. இதனைப்பற்றி தெரிந்துவர்கள் சபையுடன் தொடர்புகொண்டு மேல்நடவடிக்கையை மேற்கொள்ள தகவல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறே (1913) 1ம் கும்பாபிஷேகத்தின்போது கோ.கணபதிப்பிள்ளை அவர்களால் ஆத்தியடி நாயகன் பதிகம், ஆத்தியடி சுப்பிரமணியர் மேற்பதிகம் பாடப்பட்டது. ஆத்தியடி நாயகனுக்கு ஸ்ரீமத் மு.தம்பையாக்குருக்கள் அவர்களால் ஊஞ்சல் பாட்டும் இயற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வேண்டுவார்க்கு வேண்டும் வரங்களை கொடுத்திடும் ஆத்தியடி சித்தி விநாயகப் பெருமானின் அருள் திறத்தினால் திட்டமிட்டமிடப்பட்ட பல திருப்பணி வேலைகளுள் சில பணிகள் நிறைவேற்றப்பட்டும் சில நடைபெற்றுக்கொண்டும் இன்னும்சில நிறைவேற்றப்பட வேண்டியும் உள்ளது. இத் திருப்பணி வேலைகளுக்கு எமது வெளியூர் பக்த அடியார்கள், உறுப்பினர்களும் பெரும் பங்கு அளித்துள்ளார்கள். இவ்வாறே சில திருப்பணிகளும் உண்டு.

2007ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்படவேண்டும் அத்துடன் சுண்ணாம்புக் கட்டடங்கள் சீமெந்துக் கட்டடங்களாக மாற்றப்படவேண்டும். Y.M.L.A மண்டபத்தில் பல இடர்களுக்கு மத்தியில் இயங்கிவரும் பாலர் பாடசாலைக்கு தனியான கட்டடம் அமைக்கப்பட வேண்டும் இவ்வாறே தரும பரிபாலன சபையின் செயற்பாடுகள் செயற்பட ஆத்தியடி விநாயகரை பிரார்த்திப்போம்.



படிப்பகம்

www.padippakam.com



# விநாயகர் பெருமை

திருமதி.இ.தங்கேஸ்வரன் B.A (Hons)
மு.தேராவில் தமிழ் வித்தியாலயம் (ஆசிரியை)

**பிள்ளையார் துதி**

*"ஆனையின் வதனங் காணில் அங்குச பாசாங் காணில்*
*வானவர் துயரந்தீர்த்த வண்மை கொள் தந்தங் காணில்*
*தேனெனும் மோதகத்தைத் தேடித் துதிக்கை காணில்*
*நானிலத் தெமது நோக்கம் நலம் பெறக் காணுவோமே"*

இந்து தெய்வங்களின் வரிசையில் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு மதங்களிலும் செல்வாக்கு பெறறவன் கணபதி ஒருவன் மட்டுமே என்று கூறமுடிகிறது. சைவ சமய வழிபாட்டில் விநாயகருக்கு முதலிடம் அளித்து வழிபடும் மரபு பேணப்படுகின்றது. உலகிலே நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுபவர் மூத்தோர் அல்லது உயர்ந்தோர் ஆவர். ஆனால் இனிப்பு வழங்கல் சிற்றுண்டி வழங்கல் என்பனவற்றில் முன்னுரிமை பெறுபவர்கள் குழந்தைகளே இது சைவ சமய கடவுள் வழிபாட்டிலும் அமைந்துள்ளது. உலகின் கர்த்தா சிவபெருமானே ஆகிலும் முதற் பூசை பெறுபவர் பிள்ளையாரே ஆவார்.

விநாயகரை நாள்தோறும் வழிபடுகின்றவர்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகும், தீமைகள், துன்பங்கள் யாவும் நீங்கும், நீண்ட வாழ்நாளும்,நோயற்ற வாழ்வும் கிடைக்கும், எண்ணிய எண்ணம் கைகூடும், சிறந்த கல்வி ஞானம் உண்டாகும், வீடுபேறும் கிடைக்கும் என்பது நம்பியாண்டார்நம்பி என்பவரது கருத்தாகும்.

விநாயகப் பெருமானின் திருவுருவத்தில் யானைத் தலையும் மனித உடம்பும் கலந்து காணப்படுகின்றது. யானை மதினுட்பமும் கம்பீர நடையும், அழகும் வாய்ந்த மிருகம் ஆகும். அது தனது துதிக்கையால் எத்தகைய தடையையும் நீக்குவது போல விநாயகப் பெருமானும் ஆன்மாக்களின் இடையூறுகளை எல்லாம் நீங்கி அருளுவார்.

விநாயகரின் திருவுருவத்திற்கும் ஊர்திக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. அவரது பருத்த தோற்றப் பொலிவிற்கு அவரது வாகனமாகிய மூசிகமோ சிறியது இங்கு புறத்தோற்றம் அன்றி அக உணர்வே பிரதானமாக கொள்ளப்பட்டது. அதாவது இறைவன் சிறிய பிராணிக்கும் வல்லமை அளித்து பெரியனவற்றை தாங்கச் செய்பவர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

விநாயகர் அறிவுத் தெய்வமாகவும் பிரபல்யம் அடைந்துள்ளார். இவர் ஞானவடிவுடையவர், ஞானமுத்திரை உடையவர். இவரை திருமூலர் "ஞானக் கொழுந்து" என அழகாக கூறியுள்ளார். இதனாலேயே வித்தியாரம்ப வேளைகளில் இவருக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. தமிழகத்தில் இவர் பிரமச்சாரியாகக் கூறப்படினும் "வல்லபா" எனும் சக்தியுடனும் சித்தி, புத்தி எனும் இரு சக்திகளுடனும் போற்றப்படுகின்றார். நக்கீரர் தாம் எழுதிய பிள்ளையார் அகவலில் "அல்லல் வினை அழிந்திடு ஞானவல்லபை தன்னை மருகிய மார்பா" என்று பாடியுள்ளார்.

விநாயகருக்கு பல விரதங்கள் இருப்பினும் அவருக்கே தனிச் சிறப்பான விநாயக சஷ்டி விரதம் மிகவும் சிறப்பானது. இவ் விரதமானது கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல்



படிப்பகம்

www.padippakam.com



மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி திதி வரையில் 21நாள் அனுஷ்டிக்கப்படும். "சஷ்டி தொட்டு சதயம் விட்டு" என்பது பழமொழி இவ்விரதத்தை அதற்கே விதிக்கப்பட்ட விதிகளுக்கு அமைய 21ஆண்டுகள் அனுஷ்டித்தால் விநாயகப் பெருமானின் கிருபாகடாட்ஷத்தை பெற்று வாழலாம். என்பது உண்மை இவ்விரத காலங்களில் விநாயகரின் சிறப்புக்குரிய விநாயக புராணம், விநாயகர் காரிய சித்தி மாலை போன்றவற்றை படிப்பவர் மட்டுமல்ல அவற்றை அருகிருந்து காதலித்து கேட்பவர்கள் கூட கற்பகத்தின் பேற்றினை பெற்றிடுவதாக கூறப்படுகிறது. குழந்தைச் செல்வத்தை அடைய விளைவோர் இவ் விரதத்தை பக்தி சிரத்தையுடன் நோற்றால் பெரும் பயனை பெறுவர் என்பது திண்ணம் பிள்ளையார் கதையின் "சூலிலார் நோக்கில் சுதரை மிகப்பெறுவர்" என்பது இதனூடாக புலப்படுத்தப்படுகின்றது.

விநாயகருக்கு மிகப்பிரியமான பத்ரம் வன்னி, அருகம்புல் என்பவாகும். இதனைக்கொண்டு அர்ச்சனை செய்தால் அதற்கான பலன் ஏராளம் என்று சொல்லப்படுகின்றது. அதே போன்று நாவல் பழமும், கொழுக்கட்டையும் விநாயகருக்கு பிடித்தமானது. கொழுக்கட்டையில் மேலே மூடியிருக்கும் மாவுப் பொருள் யானையைப் போன்றவையாகும். உள்ளே இருக்கும் பூர்ணம் பகவானின் இனிமையான குணம். இத்தனை மகிமை கொண்ட கொழுக்கட்டைகளில் 21ஐ அவருக்கு நிவேதனம் செய்யவேண்டும்.

பிள்ளையார் செழிப்பு, வேளாண்மை ஆகியவற்றுக்குரிய தெய்வமாக கொள்ளப்படுகின்றார். யானை முகங்களில் மோதகத்திலுள்ள விருப்பம் இதற்காக வேளாண்மை தொடக்கத்திலும் முடிவிலும் விவசாயிகள் அவருக்கு மோதகம் அளித்து வழிபடுகின்றனர். அத்துடன் வேளாண்மை நாசமாக்கும் எலியினை கட்டுப்படுத்தி வாகனமாக கொண்டிருத்தலும் சிறப்பாகும். மேலும் தமிழ்நாடு, மகாராஷ்டிரம் முதலிய இடங்களில் உழவுத்தெய்வமாகிய இவரை வழிபட்டாலேயே நெற்பயிர் நன்கு விளைந்து நல்ல விளைவை கொடுக்கின்றது என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகின்றது. விநாயக உருவங்களில் அவர் தனது கைகளில் வைத்திருப்பதில் நெற்கதிரும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. நாற்று நடும் பெண்கள் தங்கள் வேலையை விநாயகர் கண்காணிப்பதாகவே கருதுகின்றனர். அதனால் அவர்கள் நாற்று நட்டு முடியும்போது

"ஏரிநடும் தனையும் இருப்பிருந்த பிள்ளையாரே
ஏரிநட்டு நான்போறேன் எழுந்திருக்க ஐயாவே"

என்று பாடுகின்றனர்.

எனது பிள்ளையார் பெருமையைத் தொகுத்து பார்க்கும்போது குளக்கட்டு சந்திகள், ஆற்றங்கரைகள், புனித மரங்களின் கீழ் மிக இலகுவாக வைத்து வழிபடக்கூடிய இவ் விநாயகனின் பெருமை அளவிடற்கரியது. இவரின் விரதங்களைக் காதலித்து நோற்போர் பயன்கள் பெறுவர் என்றும் விநாயகருக்குரிய ஆலயங்கள் உலகம் பூராகவும் மிளிர்கின்றன என்றும் இதிலிருந்து தெரிவது யாதெனில் பெருந்தொகையான மக்கள் இவரின் அன்பர்கள் என்றும் கூறி கடைக்கணக்கு முதல் காதல் கடிதம் வரை இவருக்குரிய சுழியிட்டே எழுதத்தொடங்குகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டி இவருக்குரிய பெருமை அளவிடமுடியாதது என்பது சாலப் பொருத்தமுடையதே.

"வேளமுகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுந்து வரும்"



படிப்பகம்

www.padippakam.com



# அன்பும் அறமும்

இந்தப்பரந்த பூவுலகத்திலே நாம் இறக்கும்போது ஒன்றையேனும் நம்முடன் எடுத்துச்செல்ல முடியாது. நாம் வாழ்ந்த காலத்தில் பிறரிடம் காட்டிய அன்பும் பிறருக்கு கொடுத்து உதவக்கூடிய அறச்செயலுமே எம்முடன் இறுதி ஜென்மம் வரை தொடரும்

அன்பானது இறைவனிடம் என்றுமே குறைவில்லாது குடிகொண்டிருக்கும் இதனால்தான் அன்பே வடிவமானவன் இறைவன் என்று கூறப்பட்டுள்ளது. இறைவனின் கருணை பொங்கும் விழிகளிலும் வரம் கொடுக்கும் கைகளிலும் அன்பு மனத்திலும் குடிகொண்டிருக்கிறது.

நல்ல வளமுள்ள மண்ணில்தான் பயிர் செழித்து வளரும் அதுபோல இதயம் தூய்மையானதாக இருந்தால்தான் அன்பு ஊற்றெடுக்கும்.
இதுபற்றி வள்ளுவர் குறிப்பிடும்போது

''செயற்கரிய யாவுள் நட்பின் அதுபோல
வினைக்கு அரிய யாவுன காப்பு''

நட்பினைப்போல் தொடர்புகொள்வதற்கு பெருமையானது வேறெதுவும் இல்லை. தொழிலுக்கு சிறந்த பாதுகாப்பாய் நட்பைப்போல் வேறெதையும் கூறிவிட முடியாது.

இந்த உலகமானது அன்பின் பிணைப்பால் உருவானது இது பல்வேறுபட்ட வடிவத்தில் காணப்படும். தாய் பிள்ளையிடம் காட்டும் அன்பும் அடியான் கடவுளிடம் தாய்ப்பசு தன் கன்றுக்குட்டியிடம் காட்டும் அன்பும் மக்களிடையே உள்ள உறவுமுறைகளும் அன்பின் வெளிப்பாடாக உள்ளது. இந்த உலகமானது நிலைபெற்று இருக்கின்றது என்றால் அது சான்றோர்களிடம் காணப்படும் அன்பு என்று கூறினால் மிகையாகாது.

பாரதியார் விநாயகனை வேண்டிப்பாடும் பொழுது மெய்யுணர்வாகிய பரந்த வெளியிலே நின்று மனிதர்களும் புல்பூண்டு பூச்சிகளும் தாவர விலங்குளும் இணங்கி வாழ்ந்திட வேண்டும் என்று தனது மன விருப்பத்தினை தெரிவிக்கின்றார். இதிலிருந்து அன்பின் பிணைப்பு வெளிக்காட்டப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



பொருட்களை மற்றவர்களுக்கு கொடுக்கும்போது அது சில காலத்தில் முடிவடையும். ஆனால் அன்பானது பெருகிக்கொண்டே போகும்.

"அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

இவ் உலகத்திலே இன்பமாக வாழ்பவர்களின் உயர்வுக்கு காரணமாய் விளங்குவது அனைவரிடமும் அன்பு செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்.

மற்றையது அறமாகும் அறம் என்று சொல்லப்படுவது பிறருக்கு கொடுத்தலும் ஆபத்தான நேரத்தில் உதவி செய்தலுமாகும்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

கிடைக்கின்றவற்றைப் பல உயிர்களுக்கும் பகுத்து கொடுத்து தானும் உண்டு வாழ்வது நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் எல்லாவற்றிற்கும் உயர்ந்ததாகும்.

இது பற்றி கம்பராமாயணத்தில் தசரனின் பிரிவுத்துயரினால் வருந்திய இராமனை தேற்றுவதற்காக வசிட்டன் பின்வருமாறு கூறுகின்றார். இவ்வுல கத்திலே மக்களாக பிறந்ததில் நாம் செய்ய வேண்டியது துறவறம். மற்றையது பிறருக்குக் கொடுத்து அதன் வழிநிற்றலும் எனக் கூறுகின்றார்.

இது போன்றே திருவள்ளுவர்

"அறத்தினால் வருவதே இன்பம் மற்று எல்லாம்
புறத்த புகழும் இல"

என அறத்தினால் வருவதே உண்மையான இன்பம் . மற்றது செயல்களால் வருகின்றவை இன்பம் போலத் தோன்றினாலும் துன்பத்தில் முடியும் அவற்றால் புகழும் அழியும்.

குறைந்தாரைக் காத்து எளியவர்களுக்கு உணவு இடுதலையும் அறநெறி தவறாதவர்கள் இவர்கள் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துதலில் இருந்து இவரது சமூக நோக்கு தெரிவாகிறது.

தசரதனின் ஆட்சிப் பொறுப்பை பரதன் ஏற்பதற்காக இராமன் அரச முறைப்படி நீயே அரசனாக வேண்டும், தாய் தந்தையரே நமது கண்கண்ட தெய்வங்கள். அவர்களது வாக்கினை நாம் மீறக் கூடாது. இந்தப் பெரி உலகத்திலே சத்தியம் என்ற கருத்து நிலை பெற வேண்டும் என்றால் நான் சொன்னதைக் கேட்பாயாக என பல வகையான அறக்கருத்துக்களை தனது தம்பிக்கு எடுத்தக் கூறுகிறான்

அறம் பற்றி கி.பி. 33ம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் படையெடுத்து வந்த அந்நியர்கள் அறக் கருத்துக்களை நூல் வடிவில் எழுதி வெளியிட்டு இருக்கின்றனர். இவர்கள் அறக் கருத்துக்களை மக்களிடம் நன்கு பிரச்சாரம் செய்தனர். அறக்கருத்துக்கள் மக்களிடையே நிலவும் ஒழுக்கம் பற்றி விளக்கம் அளிக்கின்றன.

எனவே நாம் அன்புடன் அறம் செய்து சிறப்புடன் வாழவோமாக.



படிப்பகம்

www.padippakam.com



# ஆத்தியடி சன சமூக நிலையம்

1910ம் ஆண்டு இளம் சிறுவர் இலக்கிய சங்கம் (Y.B.L.A) என்ற பெயருடன் திரு. க. வேலுப்பிள்ளை வீட்டில் திரு. நா. வேலுப்பிள்ளை தலைவராகவும் திரு. சி. கனகசபை அவர்கள் செயலாளராகவும் திரு.வே. இராமசாமி அவர்கள் போசகராகவும் நியமிக்கப்பட்டு அவர்களால் சங்கம் மேலும் வழி நடத்தப்பட்டு வந்தது. பின்னர் 1913ம் ஆண்டிலிருந்து வாலிபர் இலக்கிய சங்கம் **(Y.M.L.A)** என பெயர் பெற்றது. பின்னர் 1993ம் ஆண்டிலிருந்து இச் சங்கம் ஆத்தியடி சன சமூக நிலையம் என பெயர் மாற்றப்பட்டது.

இச் சனசமூக நிலையத்தின் பிரதான நோக்கமும் குறிக் கோள்களும்

1. கல்வி அபிவிருத்தி
2. உடல் நல அபிவிருத்தி
3. சமூக சேவை

கல்வி அபிவிருத்தியில் சமயக் கல்வி முக்கிய இடம் பெறுகின்றது. அத்துடன், இயல், இசை, நாடகம், ஆகிய முத்தமிழ் வளர்த்தல் ஆகியவையும் உள்ளடங்கும்.

ஆரம்ப காலத்தில் இச் சங்கமானது க. வேலுப்பிள்ளை அவர்களின் இல்லத்தில் இயங்கி வந்தது. பின்னர் சங்கத்திற்க்கு என்று சொந்தமாக ஒரு காணி கட்டிடம் வேண்டும். என்ற காரணத்தால் ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபையினருக்கு சொந்தமான காணி ஒன்றை நன்கொடையாக வழங்கி 1941ல்சுமார் 60 அடி நீளமும் 15அடி அகலமும் கொண்ட சகல நிகழ்வுகளும் செய்யக்கூடிய கட்டிடமாக நிறுவப்பட்டது. இதற்கு முன்னேடியாக நா.வேலுப்பிள்ளையும் சி. கனகசபையும் காணப்பட்டனர்.

ஆரம்பத்தில் 5 அங்கத்தவர்களுடன் இயங்கி இடைக்காலத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்களால் அதிகம் வாசிக்கப்பட்டது. காலத்தின் செயற்பாட்டினால் அங்கத்தவர்கள் இடைவிலகி வெளிநாடு, பிற ஊர் சென்றமையுடன் காணப்பட்ட புத்தகங்களும் களவு போயின. இதனால் இதனை தொடர்ந்து செயற்படுத்த முடியாமையும் போதிய நிதி வசதி இல்லாமையும் இதற்கு பிரதான காரணமாகும்.

படிப்பகம்


www.padippakam.com



இதனை விட 1925-12-25ம் திகதி சுவாமி விபுலானந்த அடிகள் எங்கள் சங்கத்திற்கு வருகை தந்து கதாப்பிரசங்கம் நடாத்தி அருள் பெற்று உய்ய வழிகாட்டினார். மற்றும் 1940-12-25ல் இளைஞர்கள் சிறந்த கதம்ப நிகழ்ச்சி ஒன்றை நடாத்தினார்கள். இது பலரின் உள்ளங்களைக் கொண்ட 'உடையார் மிடுக்கு' எனும் நாடகம் இடம் பெற்றது. பின்பு அந்த நாடகம் அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தளத்தில் மேடை ஏற்றப்பட்டது.

ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டி, இளைஞர் உற்சவம், சமூகசேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சேவைகள் வழங்கப்படுதலை பராட்டி திருமதி. குமாரசாமி தனபாக்கியலக்சுமி அவர்களால் 100 000/- வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் சனசமூகநிலைய செயற்பாட்டிற்கு ஆதரவு தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.



நிதி உதவி வழங்கிய
திருமதி குமாரசாமி தனபாக்கியலக்சுமி

படிப்பகம்

www.padippakam.com



# சைவ மன்ற பாலர் பாடசாலை

முன்பள்ளியில் தற்போது கடமையாற்றும் செல்வி சு.சுப்பிரமணியம் அவர்கள் தம்பசிட்டி வீதியில் ஓர் தனியார் வீட்டில் 1962ம் ஆண்டளவில் கற்பித்துக் கொண்டு இருந்தார். வன்னி நிலப்பரப்பிற்குப் போனதனால் அதை செ. கிருஸ்ணசிங்கம் ஆசிரியர் (காலம் சென்ற) சைவமன்றப் பாடசாலை என்ற பெயரில் மீண்டும் 23.03.1998ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். முதன் முதலில் இப் பாடசாலை திரு.ச.சிவசுப்பிரமணியம் (இப்பொழுதும் முன்பள்ளிக்கு பதில் ஆசிரியராக கடமையாற்றும் திருமதி பி.கமலாதேவி) கோவிந்தபிள்ளை ஒழுங்கை ஆத்தியடி வீட்டில் இயங்கிவந்தது. இங்கு சுமார் 15 மாணவர்களே கற்று வந்தனர் சைவமன்ற பாடசாலையின் ஆசிரியை என்ற பெருமை செல்வி சிவகணநாயகியையே சேரும்.

சைவமன்றப பாடசாலை ஆரம்பிக்கப்பட்டநாளில் இருந்தே சி.க.கணேசலிங்கம் தலைமையில் வெகு சிறப்பாக போட்டிகளும் விழாக்களும் நடைபெற்றன. இவ் விழாக்களின் போது கலை நிகழ்வுகளையும் நடாத்தி முன்பள்ளி பாடசாலை என புத்தக வெளியீடும் செய்தது குறிப்பிடத்தக்கது. சில காலம் அவ் விடத்தில் கற்றல் கற்பித்தல் நடைபெற்ற பின்னர் கல்லூரி வீதியிலுள்ள காலம் சென்ற கமலாசினி சண்முகம்பிள்ளை இல்லத்திலும் பின்பு ஆத்தியடி முன்புறத்திலுள்ள திருமதி சுசீலா இராமச்சந்திரன் வீட்டிலும் நடைபெற்று கொண்டு இருந்தது. இப் பாலர் பாடசாலைக்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தரும பரிபாலன சபையினர் ஒரு காணியை அன்பளிப்புச் செய்திருந்த போதிலும் நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு பிரதேச செயலர் அவர்களையும் பிரதேச பராளுமன்ற அங்கத்தவர் சிவாஜிலிங்கம், இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் அவர்களையும் அணுகியும் இக் காரியம் நிறைவேறவில்லை என கவலையுடன் தெரிவிக்கின்றோம். இதனால் தற்பொழுது முன்பள்ளி ஆத்தியடி சனசமூக நிலையத்தில் இயங்கி வருகின்றது.

இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக காலத்திற்குக் காலம் கீழ் வரும் ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



திருமதி பிரகலாதன் கமலாதேவி
செல்வி வேணி செல்லையா
செல்வி சர்மிளா கமலநாதன்
செல்வி பொன்னம்மா சின்னத்தம்பி
செல்வி நந்தினி நடராஜசுந்தரம் அவர்களாவர்.

மீண்டும் முன்பு கடைமையாற்றிய செல்வி சுப்பிரமணியம் மங்களேஸ்வரி பல வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிக் கொண்டு மாணவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்தி வருடா வருடம் விளையாட்டுப் போட்டிகளை நடாத்திக் கொண்டு வருகின்றார். இவ் ஆசிரியரின் விசேட அம்சம் யாதெனில் இவ் ஆசிரியரின் கீழ் கற்ற மாணவர்கள் பொறியிலாளர், கணக்காளர், முகாமையாளர் போன்றோரே. விளையாட்டுப் போட்டிக்கு ஆத்தியடி சனசமூக நிலையமும் ஆத்தியடி தருமபரிபாலன சபையும், பெற்றோர்களும் உதவி செய்து வருகின்றார்கள். இதில் கீழ் வருவோர் பரிசில்களும் பண உதவியும் செய்துள்ளார்கள்.

நினைவுப் பரிசில்களாகப் அமரர் அருட்பிரகாசம் அமரர் முருகேசு அமரர், கிருஸ்ணசிங்கம் அமரர் குமாரசிங்கம் அமரர் கனகசபை அமரர் சிவபாலன் அமரர் லோகசகாயம் பாலசுப்பிரமணியம் நினைவாகக் கேடயம் வழங்கியுள்ளார். அமரர், செல்வி அவர்களின் நினைவாக பாலர் பாடசாலை ஆசிரியரின் மாதாந்த சம்பளம் வழங்குவதற்காக நிரந்தர வைப்பு கணக்கில் 100000/- வழங்குவதாக யோகராஜா இந்துமதி உறுதி அளித்துள்ளார். மேலும் திரு. ஸ்ரீதரர், கனகசுந்தரம், சுந்தரராஜன், சபாரத்தினம், செல்வி இன்பமலர், திருமதி, பொன்னம்மா பணமாகவும் திருமதி மாலா ராஜ்குமார் தளபாடம் குளிர்பானமாகவும் சிவபாதம் பாடப் புத்தகமாகவும் வழங்கியுள்ளார்கள். திருமதி அமுதநாயகி ஒவ்வொரு விளையாட்டுப் போட்டிக்கும் பண உதவி செய்வார். சனசமூக இளைஞர்களும் ஆத்தியடியில் வசிப்பவர்களும் உதவி செய்து கொண்டு வருகின்றார்கள். மேலும் கற்பித்தல் செயற்பாடுகளைத் தவிர இளைய பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக 1996ம் ஆண்டு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி

படிப்பகம்

www.padippakam.com



அவர்களின் பரிந்துரையினால் யுனிசெவ் நிறுவனத்தால் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்களும் விளையாட்டுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபையால் மேசை கதிரை அன்பளிப்புச் செய்யப்பட்டது.

தென்மராட்சி வலிகாமத்தில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையினால் இடம் பெயர்ந்து ஆத்தியடியில் தங்கியிருந்த சிறார்களின் கல்விக்காக இப் பாடசாலை பெரிதும் கைகொடுத்தது. தற்பொழுது கடமையாற்றும் ஆசிரியை பாலர்களை சிறந்த முறையில் வழிநடத்தி வருடா வருடம் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடத்தும் போட்டியில் பங்கு பற்ற வைத்து கணிசமான பரிசில்களைப் பெற்றுச் செல்வதற்கு வழி சமைத்து வருகின்றார். யுனிசெவ் மூலமாக அன்பளிப்பு வழங்கப்பட்ட தண்ணீர் தாங்கியை பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய இடம் பெயர்ந்த முகாமிற்கு தற்காலிகமாக கொடுக்கப்பட்டும் திருப்பி ஒப்படைக்கபபடவில்லை என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம் இப் பாடசாலைக்குச் சொந்தமான கட்டித்தைக் கட்ட மேலும் பருத்தித்துறை பிரதேச செயலர் உதவி திட்டப்பணிப்பாளர் திருமதி ஜெயராஜா அவர்களுக்கும் பருத்தித்துறை பகுதி சனசமூக உத்தியோகத்தர் யோகராஜா அவர்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையில் கரிசணை காட்டி ஊக்கமளிக்கும் சகலருக்கும் நன்றியைத் தெரிவிக்கும் வேளையில் இப் பாடசாலையானது அனைத்து திறமைகள் உடைய சிறார்களை மேன் மேலும் விரிவாக்கி வடமராட்சியிலே பிரபல்யமான பாலர்பாடசாலையாக திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல ஆத்தியடிப் பெருமானை வேண்டுகின்றேன்.

தலைவர்
சோ. தங்கேஸ்வரன்

படிப்பகம்

www.padippakam.com



# ஆத்தியடிப் பிள்ளையார் கோயில்
## வருடாந்த நிகழ்ச்சி நிரலும் உபயகாரர்களும்

| நிகழ்ச்சி | மாதமும் திகதியும் | உபயகாரர் |
|---|---|---|
| வருடப்பிறப்பு விசேட பூசை - பொது | | |
| மகா உற்சவம் | | |
| பந்தல் கால் நாட்டல் | வைகாசித் திங்கள் | பொது |
| கிராம சாந்தி | | திரு.த.இரத்தினம் |
| கொடியேற்ற உற்சவம் | | திருமதி சோ. சரவணமுத்து |
| இரண்டாம் உற்சவம் | | திருமதி செல்லம்மா குடும்பம் |
| மூன்றாம் உற்சவம் | | திரு.க. ஜெயக்குமார் |
| நான்காம் உற்சவம் | | செல்வி.பா.பாலநந்தினி |
| ஐந்தாம் நாள் உற்சவம் | | திரு. சோ.ஆறுமுகதாஸ் |
| | | திரு.சோ.அரவிந்ததாஸ் |
| ஆறாம் நாள் உற்சவம் | | திரு.சோ. மண்டலேஸ்வரன் |
| ஏழாம் உற்சவம் | | திரு சி.சதாசிவம் |
| சப்பறத்திருவிழா | | இளைஞர் கல்வித்தேர்ச்சி சங்கம் |
| தேர்த்திருவிழா | | திருமதி.இ.பாலசுப்பிரமணியம் |
| தீர்த்தோற்சவம் | பௌர்ணமி | திருமதி.ச.சிவபாலன் |
| **நவராத்திரி விழா** | | |
| ஆரம்ப பூசை | பிரதமை | திரு.வே.கணேசமூர்த்தி |
| இரண்டாவது | துதியை | திரு.வ.கனகரத்தினம் |
| மூன்றாவது | திருதியை | திரு.கு. ஆறுமுகம் |
| நான்காவது | சதுர்த்தி | திரு.ச.சந்திரசேகரம் |
| ஐந்தாவது | பஞ்சமி | திரு.மா.சண்முகலிங்கம் |

படிப்பகம்

www.padippakam.com



| | | |
|---|---|---|
| ஆறாவது | ஷஷ்டி | திரு.நா. கோகுலதாஸ் |
| ஏழாவது | மித்திரஸப்தமி | திரு. ச. சுப்பிரமணியம் |
| எட்டாவது | மகாஷ்டமி | திரு.க.சண்முகநாதன் |
| சரஸ்வதி பூசை | மகாநவமி | திரு.த.இரத்தினம் |
| விஜயதசமி | விஜயதசமி | இளைஞர் கல்வித்தேர்ச்சி சங்கம் |

## ஷ்கந்த ஷஷ்டி விரத பூஜை கார்த்திகைத் திங்கள்

| | |
|---|---|
| ஸ்கந்த ஷஷ்டி விரதபூஜை பிரதமை | திரு. ஆ.வேல்முருகு |
| இரண்டாம் பூஜை | திரு. க. முருகையா |
| மூன்றாம் பூஜை | திரு.ச. மகேந்திரன் |
| நான்காம் பூஜை | திரு.ச.முருகேசு |
| ஐந்தாம் பூஜை | திரு. சந்திரப்பிரகாசம் |
| சூரன்போர்- ஸ்கந்த ஷஷ்டி விரதம் | திரு.ஆ.குமாரசாமி |
| பாறணை பூஜை | திரு.ச. சபாபதிப்பிள்ளை |
| மணவாளக்கோல விழா | திரு.க. விக்னராஜா |

## பிள்ளையார் கதையும் விசேட பூஜையும் கார்த்திகை அபரப்ஷ பிரதமை

| | |
|---|---|
| பிள்ளையார் கதை விரதாரம்பம் | திரு. க.பாலச்சந்திரன் |
| இரண்டாம் நாள் | திரு. சி. தியாகராஜா |
| மூன்றாம் நாள் | திரு. சி. பிரகலாதன் |
| நான்காம் நாள் | திரு.நா. கோகுலதாஸ் |
| ஐந்தாம் நாள் | திரு.சி. சிதம்பரப்பிள்ளை |
| ஆறாவது நாள் | திரு. சி. மகேந்திரன் |
| ஏழாவது நாள் | திரு.சி. சந்திரகாந்தன் |
| எட்டாம் நாள் | திரு. B.N.சிவபாலன் |
| ஒன்பதாம் நாள் | திரு.வே.சிறீஸ்கந்தவேல் |
| பத்தாம் நாள் | திரு. க.முருகானந்தன் |
| பதினோராம் நாள் | திரு. ஆ. சோமதேவன் |
| பன்னிரண்டாம் நாள் | திரு.மா. சண்முகலிங்கம் |

படிப்பகம்

www.padippakam.com



பதின்மூன்றாம் நாள்
பதின்நான்காம் நாள்
பதின்ஐந்தாம் நாள்
பதின்ஆறாம்நாள்
பதின்ஏழாம்நாள்
பதின்எட்டாம்நாள்
பத்தொன்பதாம் நாள்
கஜமுகன் போர்
விநாயகஷஷ்டி

திரு. இரா.மாதவன்
திரு.ம. ஜெயரஞ்சன்
திருமதி. செ.இராசேஸ்வரன்
திருமதி.சணமுகம் சுதா

திருமதி. தங்கேஸ்வரன்
திரு.ச. இராமச்சந்திரன்
திருமதி.புவனேஸ்வரன்
திரு.க. சண்முகநாதன்

**கந்தபுராணப்படிப்பும் பூஜையும் கார்த்திகைத்திங்கள்-ரோகினி நட்சத்திரம்**

திருக்கலியாணம்
திருஅவதாரப்படலம்
சரவணப்படலம்
திருவிளையாடற்படலம்
தாரகன்வதைப்படலம்
குமாரபுரிப்படலம்
திருச்செந்திப்படலம்
மார்க்கண்டேயபடலம்
காவிரிநீங்குபடலம்
மகேந்திரகாண்டம்
சூரபத்மன்யுத்தபடலம்
சிங்கமுகாசுரன்வதைப்படலம்
சூரபன்மன்வதைப்படலம்
தெய்வயானைஅம்மன் திருக்கல்யாணம்
ததீசிஉத்தரப்படலம்
கயமுகன்உற்பத்திப்படலம்
வீரபத்திரர்படலம்
யாகசங்காரம்
அடிமுடிதேடும்படலம்

திரு.சி.மகேந்திரன்
திரு.இராசமாணிக்கம் மாதவன்
திரு.சி.சரவணபவான்
திரு.வ. சிறிஸ்கந்தவேல்
திரு.ச. கோபிநாத்
திரு.ஜெ.ஜிதேந்திரா
திரு.நா. செந்திவேல்
திருமதி. உமாகணேஸ்
திரு. கரணாகரன்
திரு.வே. சுப்பிரமணியம்
திரு.க.வே.முத்துக்குமாரசாமி
திரு.ஆ. சோமசுந்தரம்
திரு.வே. பாலசுப்பிரமணியம்
திருமதி.கோ. சிவபாலன்
திரு.வ.கண்ணபிரான்
திருமதி. ம.குமாரசிங்கம்
திரு.வ.வேலாயுதம்
திரு.பா.ஜெயகோபால்
திரு.ச. பிரகலாதன்

படிப்பகம்

www.padippakam.com



| | |
|---|---|
| தக்கன்சிவபூசை | திரு.சி.சிவக்கொழுந்து |
| கந்தவிரதம் | திருமதி.க.இராஜேஸ்வரி |
| வள்ளியம்மன் திருக்கல்யாணம் | திரு.தி.சாந்தகுமார் |
| அன்னதானம் | பொது |
| வைரவர்மடை | பொது |

**திருவெம்பாவை**

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | மார்கழி ஷஷ்டி | திரு.தி.அரசரத்தினம் |
| இரண்டாம் நாள் | | ச. சுப்பிரமணியம் |
| மூன்றாம்நாள் | | திரு.சந்திரபிரகாஸ் |
| நான்காம்நாள் | | திரு.ந.சிவானந்தம் |
| ஐந்தாம்நாள் | | திரு.சோ. இராமேஸ்வரன் |
| ஆறாம்நாள் | | திருமதி.ச.தியாகராஜா |
| ஏழாம்நாள் | | திரு.சு. விநாயகம்பிள்ளை |
| எட்டாம்நாள் | | திருமதி.ச. சிறீதரன் |
| ஒன்பதாம்நாள் | | திருமதி.சி.கருணாகரன் |
| திருவாதிரை | ஆருத்திரா தரிசனம் | திரு.க.இராஜேஸ்வரன் |
| தைப்பொங்கல் விசேட பூசை | | பொது |
| தைப்பூசம் | | பொது |

மகாசிவராத்திரி மாசி - திரயோதசி சதுர்த்தசிகளோடு கூடிய திதி

| | |
|---|---|
| 1ம் யாமப்பூஜை | திரு.வீ.நடராஜா |
| 2ம் யாமப்பூஜை | திரு.பொன்னம்மா |
| 3ம்யாமப்பூஜை | திருமதி.ச.கனகசபை |
| 4ம்யாமப்பூஜை | திரு.க.சண்முகநாதன் |

படிப்பகம்

www.padippakam.com



## விநாயக சதுர்த்தி

| | | |
|---|---|---|
| சதுர்த்தி | சித்திரை | திரு.வ.கமலநாதன் |
| சதுர்த்தி | வைகாசி | திரு.த.இரத்தினம் |
| சதுர்த்தி | ஆனி | திரு.இ.உருத்திரா |
| சதுர்த்தி | ஆடி | திரு.ப.சிவநாதன் |
| சதுர்த்தி | ஆவணி | திருமதி.இ.சிவகடாட்சம் |
| சதுர்த்தி | புரட்டாதி | திரு.ப.செல்வராஜா |
| சதுர்த்தி | ஐப்பசி | திரு.த.சந்திரசேகரம் |
| சதுர்த்தி | கார்த்திகை | திரு.இ.இராகவன் |
| சதுர்த்தி | மார்கழி | திரு.ச.சபாபதிப்பிள்ளை |
| சதுர்த்தி | தை | திருமதி யோ. இந்துமதி |
| சதுர்த்தி | மாசி | திரு.வே.பாலசுப்பிரமணியம் |
| சதுர்த்தி | பங்குனி | திரு.க.இராசவரோதயம் |
| தீபாவளி | ஐப்பசி சதுர்த்தி | திருமதி பா.கணநாதன் |
| திருக்கார்த்திகை | கார்த்திகை பௌர்ணமி | திருமதி இ.சிவகடாடசம் |
| மணவாளக்கோலம் | கார்த்திகை ரேவதி நட்சத்திரம் | திரு.ச.சிவப்பிரகாசம் |
| | ஆவணி உத்திராடம் | திரு.ச. நந்தகுமார் |

படிப்பகம்

www.padippakam.com

# நன்றி கூறுகின்றோம்

*எக்காலம முற்தொடங்க இடையூறின்றி*
*இனிது நிறைவேற வருள் புரிவாயே*
*விக்கினங்கள் தீர்க்கும் விக்கினேசா என்றும்*
*வினைகளறுப்பவனென்றும் உனைத்துதிப்போம்*

காலம் சென்ற எனது தந்தையார் ச.கணபதிப்பிள்ளை பொருளாளராக 20 ஆண்டு கடமையாற்றும்பொழுது தொண்டனாக இருந்ததால் சிறுவயதில் இருந்தே ஆலயத்தை செவ்வனே நடாத்த தந்தையார் பட்ட கஷ்ரங்களை நன்கு அறிவேன். மாதாமாதம் சபையின் அங்கத்தவர்கள் வழங்கும் சந்தா பணத்தை கொண்டே பூசகரின் சம்பளமும் ஆலயமும் பரிபாலிக்கப்பட்டதால் பணநிலமை மோசமானதாக இருந்தது. 1971ம் ஆண்டு எனது தந்யைார் இறந்ததும் தொண்டராக இருந்த நான் ஆலய பரிபாலனத்தில் பங்குகொள்ள வேண்டியதால் 1972ம் ஆண்டில் இருந்து சபையின் செயலாளராக கடமையாற்றினேன். பண நிலையை உயர்த்துவதற்காக கீழ் வருவோர் உபகுழு அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டு சபை பண நிலமையும் ஆலய திருத்தங்களும் மெதுமெதுவாய் ஊர்ந்தன. இவ்விடயத்தில் காலம் சென்ற ச.மு.சங்கரப்பிள்ளை வே.கதிரைமலை வே.திருநாவுக்கரசு இ.கணபதிப்பிள்ளை அவர்களின் சேவைகள் பாராட்டத்தக்கதாகும்.

1 948ம் ஆண்டு இயற்றப்பட்ட சபையின் யாப்பு 1973ம் ஆண்டு உப குழுவான திரு. உருத்திரா அவர்களும் காலம் சென்ற சே. வேல்முருகு ச.சந்திரசேகரம் அவர்களின் பரிந்துரைகளின் மேல் திருத்தி அமைக்கப்பட்டது. 1974ம் ஆண்டு காலம் சென்ற காலம் சென்ற கந்தையா நிதித்தலைவர் பதவியை ஏற்று அவரின் விடா முயற்சியால் பண நிலமை மேலும் உயர்ந்து முதன்முதலாக 1975ம் ஆண்டு சபையின் பெயரில் புலோலி கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் பண வைப்பில் இட ஆரம்பிக்கப்பட்டது. அவர்களில் வருடம்தோறும் பணம் சேகரிப்பது கடினமானது என தெரியப்பட்டு அதனால் 1982ம் ஆண்டில் இருந்து ஆயுட் சந்தாவாக மாற்றப்பட்டது. 250 உடன் ஆரம்பிக்கப்பட்ட ஆயுட் சந்தா இன்று 2000/= வரை அதிகரித்துள்ளது. இருந்தும் இன்னும் பணநிலை அதிகரிக்கவேண்டும் என்பதை தெரிவிக்கின்றேன்.

1983ம் ஆண்டு முகாமையாளர் பதவியை ஏற்ற நான் இன்றும் அதே பதவியில் இருந்து 1983, 1995 நடைபெற்ற கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவேற்ற எம்பெருமான் அருள்பாலித்தார். இது மட்டுமல்ல விநாயகப் பெருமானின் அருளினால் எனது சகல கருமங்களும் இனிதே நடைபெற்று கொண்டு வருகின்றது. முதலில் இன்று வரை என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நன்றியைத் தெரிவிக்கும் வேளையில் ஆனந்தத்துடன் விநாயகப் பெருமானையும் துதி செய்கிறேன்.

நிர்வாக சபையில் தீர்மானிக்கப் பட்ட அநேகமான திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இச்சபை ஆரம்பித்து 2004 – 03 – 31 ம் திகதி நூறு வருடம் முடிவடைவதனால் அன்றே நூற்றாண்டு விழா செய்வதாக எண்ணி இருந்தோம். நாட்டின் அரசியல் சூழ்நிலைகளாலும் வேலைப்பழுக்களாலும் இன்று

படிப்பகம்

www.padippakam.com

நடாத்துகின்றோம். நூற்றாண்டு விழாவின் பொருட்டு நூல் ஒன்றை வெளியிட வேண்டுமென தீர்மானித்ததனால் இதனை நிறைவேற்றுவதற்கு உறு துணையாக இருந்த ஆறுமுகக் கந்தவேல் விஜயராம் அவர்களுக்கும் சபையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நூலில் விளம்பரங்கள் சேர்ப்பதற்கு பருத்தித்துறை சார் வாணிபரிடம் சென்ற பொழுது எங்களை நேசக் கரங்களுடன் வரவேற்று விளம்பரங்களை தந்துதவியமைக்கு சபையின் சார்பிலும் தனிப்பட்ட சார்பிலும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மற்றும் குறுகிய காலத்தில் நூலை வடிவமைத்துத் தந்தமைக்கு நாதன்ஸ் பதிப்பகத்தாருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மற்றும் நித்திய பூஜையை மேற் கொள்ளும் மதியாபரணக் குருக்களுக்கும் மஹோற்சவம், சங்காபிஷேகம் போன்றவற்றின் பிரதம குருவான உயர்பீடம் கிரியா கலாமணி சிவாகம தத்துவ நிதி சிவஸ்ரீ சிறிகாந்தா அவர்களுக்கும் அவர்களுடன் வரும் உதவிக்குருக்களுக்கும் நாம் கேட்கும் போது உதவி செய்ய வரும் இந்திரம்மன் கோவில் ஆலயக் குரு சி. இந்திரராஜா குருக்கள் அவர்களுக்கும் மங்கள வாத்தியத்தை இசைக்கும் சின்னராசா புதல்வர்களுக்கும் ஆலயத்தில் உதவியாக இருக்கும் செல்வராஜா தியாகராஜா, மணியம் தங்கப் பழம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு அதிவிசேடமாக ஆத்தியடி வாழ் இளைஞர்களாகிய

| | |
|---|---|
| சோ.கனகசுந்தரம் | நா.மயூரன் |
| தே.வாசுதேவன் | ச.கணேந்திரன் |
| வி.தேவராஜன், மணிவாசன் | தி.கணேஸ் |
| ச.ரவிராஜன் | தி.சுதர்சன் |
| பி.ராஜராஜன் | ச. மோகன் |
| ம.சங்கர் | சி. சாந்தரதன் |
| அ.அமிர்தராஜ் | மா.மயூரன் |
| ஆ.விஜயராம் | ந.சக்திவேல் |
| இ.கேசவன் | சி.பிரகாஸ் |
| வி.விஜயகுமார் | வி. ஜெகதீஸ்வரன் |
| ர.குகன் | க. தயாளன் |

ச.சிவக்கண்ணன் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு வாசுதேவன் அவர்களால் பூங்கொல்லை பெரும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு பூங்கன்றுகள் நாட்டப்பட்ட பின் தற்போது திரு. சோ.தங்கேஸ்வரன் அவர்கள் பரிபாலித்து வருகிறார் மேலும் வேண்டிய போதெல்லாம் சரீர உதவி புரியும் பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். இதைவிட ஆலயத்தை எப்பொழுதும் நினைவாகக் கொண்டிருக்கும் கந்தையா விக்கினராஜா (விக்கி – கனடா) தணிகாசலன், யோகநாதன் (லண்டன்) ஜெ.சிவகுமாரி (கொழும்பு) இவர்களுடன் ஒத்துழைக்கும் அனைத்து வெளிநாட்டு அடியார்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தர்மபரிபாலன சபையின் சார்பில்

**க. சண்முகநாதன்**

(முகாமையாளர்)

படிப்பகம்